நபிகள் நாயகம்
முஹம்மது நபி
இறுதி இறைத் தூதர்

உழைப்பாளியின்
வியர்வை உலர்வதற்கு முன்
கூலியை கொடுத்து விடுங்கள்
நபிகள் நாயகம் (ஸல்)



பிறமத அன்பாளர்கள் படித்து
உண்மையை உணர்ந்து, நபிகள் நாயகம்
அவர்களை பின்பற்றுவதற்காக!

MASFOT
Raise Yourself To Help Mankind
NABA
MAS FOUNDATION TRUST

MAS Foundation Trust, 19 Thacker Street, Purasawalkam, Chennai 600 084
88388 92393

உலகம் படைக்கப்பட்டு, முதல் மனிதன் **ஆதமின்** உருவாக்கத்திற்கு பின் **மூன்று முக்கிய கொள்கைகளை** முன்னிறுத்தியே **இறைவன்** இந்த **உலகத்தை இயக்குகிறான்.** இன்னும் இவ்வுலகம் **முடிவு (அழிவு)க்கு வரும்** வரை **இவ்வாறே இயங்கும்.** அந்த **மூன்றையும்** கீழ்க்கண்ட **புத்தகங்கள்** மூலம் நீங்கள் தெளிவாக **அறிந்து கொள்ள முடியும்.** தவறாமல் **படிக்கவும்.** உங்கள் **சந்ததிகளையும்** படிக்க ஆர்வபடுத்தவும்.



ஏகத்துவம்



தூதுத்துவம்



மரணத்திற்கு பின்

நபிகள் நாயகம்
முஹம்மது நபி
இறுதி இறைத் தூதர்

(அல்லாஹ் நபி அவர்கள் மீது கருணையும் சாந்தியும் பொழிவானாக)

தொகுப்பு:

இப்னு முஹம்மத்

MASFOT
Raise Yourself To Help Mankind
NABA
MAS FOUNDATION TRUST

MAS Foundation Trust
No.19, Thacker Street,
Purasawalkam.
Chennai 600 084.
Mobile: 88388 92393

FREE DISTRIBUTION ONLY
இலவச விநியோகத்திற்கு மட்டும்

ABOUT THIS BOOK

Name of the Book	:	**NABIGAL NAYAGAM MUHAMMAD NABI IRUTHI IRAI THOOTHAR**
Author	:	**Ibn Muhammad**
Assisted by	:	Sheikh & Sheikh
Language	:	Tamil
Edition	:	1st Edition (June 2024)
Copies	:	1000
Total Pages	:	80
Published by	:	**MAS Foundation Trust** No.19, Thacker Street, Purasawalkam, Chennai - 600 084. Mobile: **88388 92393**

உள்ளே...

✸ முன்னுரை.....08

1. எத்தனை தூதர்கள் உலகிற்கு வந்திருக்கிறார்கள்?.....11

2. முஹம்மது நபியுடன் ஏன் "இறுதி நபி" என்று அதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்?.....14

3. "முஹம்மது" என்ற பெயர் கொண்ட நபரின் பிறப்பும், வளர்ப்பும் - இருபத்து ஐந்து வயது வரை! 17

4. வியாபாரமும், மணமுடிப்பும், குழந்தைகளும், 40 வயது வரை வாழ்க்கையும்.....15

5. "நபியாக", "இறுதி தூதராக" இறைவன் "முஹம்மது" அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்-ஒரு பார்வை..19

6. நபியாக, இறைவனின் தூதராக, இறுதி தூதராக முஹம்மது அவர்களை இறைவன் தேர்ந்தெடுக்கும் ஆரம்பகால நிகழ்வுகள்.....23

7. ஓரிறைக் கொள்கையின் பக்கம் மக்களை அழைத்தலும், எதிர்ப்பு அலையும். 13 ஆண்டுகள் மக்காவில் பரப்புரையும்.....29

8. ஹிஜ்ரா (நாடு துறத்தல்), மக்காவைவிட்டு மதீனாவிற்க்கு.....33

9. ஆரம்ப கால மதீனா வாழ்க்கை.....35

10. போர்கள் - ஒரு கண்ணோட்டம்.....37

11. போற்றுதலுக்குரிய இஸ்லாமிய போரும் அதன் ஒழுக்கமும்.....40

12. மக்காவில் இருக்கும் இணை வைப்பவர்களுடன் சமாதான ஒப்பந்தமும், உலக ஆட்சியாளர்களை இஸ்லாத்தின் (ஓரிறைக் கொள்கையின்) பக்கம் அழைத்தல், மக்கா வெற்றியும்.....43

13. நபியவர்களின் பண்புகளும நற்குணங்களும்.....49

14. இறுதி இறைத்தூதர் முஹம்மது இறுதி பேருரை ஆற்றும் முன்பு...(இடமும், காலச் சூழ்நிலையும்).....52

15. "நபியவர்களின் இறுதிப் பேருரை".....53

16. தூதுத்துவ பணி முடிவுற்றதால், இறுதி தூதர் முஹம்மது நபியின் இறுதி நாட்களும், மரணமும்!.....64

✸ இறுதியாக உங்களிடம்.....67

✸ முஸ்லிமாக ஆவதும் முஸ்லிமாக இருப்பதும் எப்படி?..69

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே!

உங்கள் கையில் தவழும் இந்த புத்தகம் நீங்கள் அதிகம் **"நபிகள் நாயகம்"** என்றும், மற்றும் **"முஹம்மது நபி (ஸல்)"** என்றும் அறியப்பட்ட **"இறுதி இறைத் தூதரைப்"** பற்றி மேலதிகமாக அறிய உதவும் சிறிய தொகுப்பு.

பெரும்பான்மையான நேரங்களில் நீங்கள் ஆட்டோவின் பின்னால் எழுதப்பட்ட **நபிகள் நாயகத்தின்** வாசகங்களின் மூலமாகவோ, அல்லது செய்தித்தாளில் வரும் **நபிகளின் பொன் மொழிகள்** மூலமாகவோ அல்லது அறிஞர்கள் **நபிகள் நாயகத்தைப் பற்றி** சொன்ன கருத்துக்கள் மூலமாகவோ அல்லது நீங்களாக படித்தோ, கேட்டோ தெரிந்து கொண்டதன் மூலமாகவோ அல்லது சோஷியல் மீடியா மூலமாகவோ **நபிகள் நாயகத்தின்** கருத்துகள் உங்களை ஆழமாக பல நேரங்களில் **கவர்ந்திழுக்கக் கூடும்**. இவ்வளவு தெளிவாக **செய்திகளை, கருத்துக்களை** சொல்லக்கூடிய இந்த மாமனிதரைப் பற்றி நீங்கள் மேற்கொண்டு அறிய, பின்பற்ற இந்த புத்தகம் உங்களுக்கு உதவும்.

- **யார் இவர்?**
- **ஏன் இவரது உபதேசம் சிறப்பு வாய்ந்தது?**
- **நமக்கும் இவருக்கும் உள்ள தொடர்பு என்ன?**
- **இவர் சொல்லும் இறைச் செய்தியை மற்றும் உரைக்கும்**
- **பொன்மொழிகளைப் பின்பற்றுவது அல்லது ஏற்று நடப்பது சாத்தியமா?** என்பதை பார்ப்போம்.

இது ஒரு சிறிய தொகுப்பே! இதற்குப் பின் உள்ள அட்டையில் நபிகள் நாயகத்தைப் பற்றி மேலும் விளக்கமாக

நீங்கள் அறிந்து கொள்வதற்காக வேற வேற தலைப்பில் உள்ள புத்தகங்களின் **க்யூ ஆர் கோடு (QR Code)** உங்களுக்கு இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் அவற்றை ஸ்கேன் செய்து மேல் அதிகமாக தெரிந்து கொள்ளுங்கள்.

"இறைவன் நம் அனைவருக்கும் நேர்வழி காட்டுவானாக!"



முன்னுரை

அகில உலகத்தையும் படைத்து பரிபாலிக்கும் அந்த ஏக இறைவன் முதல் மனிதனாகிய **ஆதாம்** மற்றும் அவருடைய மனைவியாகிய **ஏவாள்** அவர்கள் இருவரையும் படைத்ததற்குப் பிறகு மூன்று முக்கிய அடிப்படை **கட்டளைகளைக்** கொண்டே இந்த மனித குலத்தை இதுவரை இறைவன் வழி நடத்திக் கொண்டு வந்திருக்கிறான்

அந்த **மூன்று** முக்கிய **கட்டளைகள்** என்னவென்று பார்த்தால்;

1) கட்டளை நம்பர் ஒன்று: **ஏகத்துவம்**

அகில உலகங்களையும் படைத்து பரிபாலிக்கும் அந்த ஏக இறைவன் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும்.

2) கட்டளை நம்பர் இரண்டு: **தூதுத்துவம்**.

இறைவன் மனித உருவில் உலகத்திற்கு வரமாட்டான். அது அவனுக்கு தகுமானதல்ல.

இதுதான் நாம் முதலில் விளங்க வேண்டிய முக்கியமான உண்மை. அதற்கு பதிலாக தான் படைத்த மனித குலத்திலேயே சிறந்த ஒருவரை இறைவனே தூதராக தேர்ந்தெடுக்கிறான். (எப்படி நாம் வகுப்பில் கிளாஸ் லீடரை தேர்ந்தெடுக்குறோமோ அதன்படி) அவர் மூலமாக இறைவன் தன் கட்டளைகளை மனித குலத்திற்கு அனுப்புவான்.

தூதர் ஏன்?

அந்த தூதர்கள் அனைவருமே சாதாரண மனிதர்களே! அவரவர்கள் வாழும் சமுதாயத்திற்காக அவர் இறைவன் கட்டளையிட்ட பிரகாரம்.

1. "இறைவனை மட்டுமே வணங்க வேண்டும்" என்றும் **2. இறைவனுடைய கட்டளைகளை பின்பற்ற வேண்டும்** என்று சொல்வதோடு மட்டுமல்லாமல் அவரே அந்த (தூதரே) கட்டளையை மனிதனாக இருப்பதினால் பின்பற்றி நமக்கு வழி நடத்திக் காட்டுவார். அதற்கு காரணம் **மனிதனால் இறைவன் இட்ட கட்டளைகளை பின்பற்றி நடக்க சாத்தியமானதே** என்பதை நிரூபிப்பதற்காகவே இறைவன் மனிதர்களையே தூதராக தேர்ந்தெடுக்கிறான்.

எந்த தூதரை இறைவன் இந்த உலகத்திற்கு வழிகாட்ட அனுப்பினானோ/தேர்நதெடுத்தானோ அந்த தூதரையே நாம் பின்பற்ற வேண்டும் அதாவது அந்த தூதர் காட்டித் தரும் ஏவல், விலக்கல்களை அதாவது 'எதை செய்ய வேண்டும்', 'எதை செய்யக்கூடாது' என்பதை அவரே சொல்லி தந்து அதையே அவரும் பின்பற்றி நமக்கு முன்னுதாரணமாக அவர் நம்மை வழி நடத்துவார். அவரை பின்பற்றி வாழக்கூடிய நாமும் அவர் சொல்லுகிற கட்டளைகளை ஏற்று அவர் விலக்கக்கூடியவைகளை விலக்கி வாழ வேண்டியது இரண்டாவது கட்டளை.

3) கட்டளை நம்பர் மூன்று: **மறுமை** (இறப்பிற்கு பிறகு உள்ள வாழ்க்கை)

நாம் அனைவருமே ஒருநாள் அதாவது நமக்கு குறிப்பிடப்பட்ட தவணை நெருங்கும்போது இறந்து விடுவோம். இந்த உலகத்தில் நாம் அனுப்பப்பட்டதின் நோக்கம்; நாம் பிறந்ததிலிருந்து நமக்கு விதிக்கப்பட்ட இறப்பு வரும் வரை நாம் அந்த ஏக இறைவனை மப்டுமே வணங்கி அவனுடைய கட்டளைகளை (வேதம் + தூதரின் வழிகாட்டுதல்) ஏற்று நடந்தால் இறந்ததற்குப் பிறகு இறைவன் முடிவில்லாத ஒரு உலகத்தில் சொர்க்கத்தை தருவதாகவும், இறைவனை ஏற்க மறுத்தோ (கடவுள் மறுப்புக் கொள்கை) அல்லது இறைவனை வணங்க தவறியோ (தான் தோன்றித்தனமாக, மனோ இச்சையின்படி வாழ்வதினாலோ) அல்லது இறைவன்

அல்லாதவர்களை ஆதாரமில்லாமல் வணங்குவதன் மூலமாகவோ (எங்கள் மூதாதையர்கள் எதில் இருக்கக் கண்டோமோ அதையே பின்பற்றுவோம்) என்று நடப்பதினாலோ நமக்கு இறப்பிற்குப் பிறகு தண்டனையாக நரகத்தை, முடிவில்லாத உலகத்தில் நரகத்தையே சித்தப்படுத்தி வைத்திருக்கிறான் என்பதே அந்த மூன்றாவது முக்கிய கட்டளையாகும்.

அதில் இரண்டாவது கட்டளையான தூதுத்துவத்தை விளக்குவதே இச்சிறிய நூல்.



1.எத்தனை தூதர்கள் உலகிற்கு வந்திருக்கிறார்கள்?

உலகம் தோன்றியதிலிருந்து இன்றைய தேதி வரை எத்தனை தூதர்கள் உலகிற்கு வந்திருக்கிறார்கள் என்பதை அறிய முடியுமா? என்றால் ஆமாம். இறைவனே குர்ஆனில் சொல்லுகிறான்.

ஒவ்வொரு தூதரையும் அவருடைய சமூகத்தாருக்கு அவர் விளக்கிக் கூறுவதற்காக அவர்களுடைய மொழியிலேயே (போதிக்கும் படி) நாம் அனுப்பிவைத்தோம். (அல்குர்ஆன்: 14:4)

எத்தனை சமுதாயங்களை இறைவன் தோற்றுவித்து அது முடிவு பெற்றிருக்கிறது என்பதை நாம் அறியோம். ஆனால் எல்லா சமுதாயத்திற்கும் தூதர்கள் அவர்கள் பேசும் மொழியிலேயே போதிப்பதற்காக இறைவன் அனுப்பி இருக்கிறான் என்கிறது குர்ஆன்.

அத்தோடு நில்லாமல் இருபத்தி ஐந்து (25) தூதர்களின் பெயர்களை இறைவன் **குர்ஆனில்** பெயர் குறிப்பிட்டு கூறி இருக்கிறான்.

அந்த இருபத்தி ஐந்து (25) **தூதர்கள் யார்? யார்?** என்பதை நாம் பார்ப்போம். **(அடுத்த பக்கம் Page No.12-ஐ பார்க்கவும்)**

இதன் மூலம் மனித குலத்தின் **முதல் தூதர் ஆதம்** என்றும் கடைசி மற்றும் **இறுதித் தூதர் முஹம்மது (ஸல்)** என்பதையும் நாம் அறிய முடிகிறது.

முஹம்மது நபி (ஸல்) அவர்களே இறுதி தூதர் என்றும் இதற்க்கு பிறகு உலகம அழியும் வரை வேறு தூதர்கள் வரவே மாட்டார்கள் என்று **குர்ஆன்** கூறுகிறது.

முஹம்மது(ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை;

குரானில் கூறப்பட்டுள்ள 25 இறைத் தூதர்களின் பெயர்கள்

1. ஆதம்,
2. இத்ரீஸ் (Enoch),
3. நூஹ் (Noah),
4. ஹூத் (Heber),
5. சாலிஹ் (Methusaleh),
6. லூத் (Lot),
7. இப்ராஹிம் (Abraham),



8. இஸ்மாயீல் (Ishmael)
9. இஸ்ஹாக் (Isaac),
10. யாகூப் (Jacob),
11. யூசுப் (Joseph),
12. ஷுஜப் (Jethro),
13. அய்யூப் (Job),
14. துல்கிஃப்லு (Ezekiel),
15. மூஸா (Moses),
16. ஹாரூன் (Aaron),
17. தாவூத் (David),
18. சுலைமான் (Solomon),
19. இல்யாஸ் (Elias),
20. அல்யஸ்அ (Elisha)
21. யூனுஸ் (Jonah)
22. ஜக்கரியா (Zachariah)
23. யஹ்யா (John)
24. ஈஸா (Jesus)
25. முஹம்மது

ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார்; மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன். (அல்குர்ஆன் 33:40)

மக்களே! எனக்குப்பின் எந்த ஒர் இறைத்தூதரும் இல்லை; உங்களுக்குப்பின் எந்த ஒரு சமுதாயமும் இல்லை. (ளிலாலுஸ் ஜன்னா 1061).



2. முஹம்மது நபியுடன் ஏன் "இறுதி நபி" என்று அதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்?

கீழ்க்காணும் வசனங்களில் 33:40, 34:28, 62:3 நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி நபி எனவும், அவர்களுக்குப் பின் எந்த நபியும் வரமாட்டார்கள் எனவும் கூறுகின்றன.

முதல் நபியான ஆதம் (அலை) அவர்கள் முதல் தொடர்ந்து நபிமார்களை அனுப்பிக் கொண்டே வந்த இறைவன், முஹம்மது நபியுடன் ஏன் அதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்? நபிமார்கள் வருவது நன்மை தானே என சிலர் நினைக்கலாம்.

எந்தக் காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் அதற்கான தேவை இருந்தால் தான் அறிவுடையோர் அதைச் செய்வார்கள்.

மாபெரும் பேரறிவாளன் அல்லாஹ் தேவையற்ற எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டான்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் தொடர்ந்து நபிமார்களை அனுப்பியதற்குத் தக்க காரணங்கள் இருந்தன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் அந்தக் காரணங்களில் ஒன்று கூட இல்லை.

மனிதர்களுக்கு நல்வழி காட்டுவதற்காக ஒரு வேதத்துடன் தூதரை இறைவன் அனுப்பி, அந்த வேதமும், அந்தத் தூதரின் விளக்கமும் பாதுகாக்கப்படாத நிலையில் தான் அடுத்து ஒரு தூதரை அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படும். அல்லது ஒரு தூதர் மரணித்த பின் அவர் கொண்டு வந்த வேதத்தையும், அவரது போதனைகளையும் கூட்டி, குறைத்து, மாற்றி, மறைத்து மனிதர்கள் கைவரிசையைக் காட்டி இருக்கும் போதும், அவற்றைச் சரி செய்வதற்காக இன்னொரு தூதரை அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படும்.

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொறுத்த

வரை இந்தக் காரணங்கள் அறவே இல்லை. அவர்களுக்கு இறைவன் வழங்கிய **குர்ஆன்** எனும் வேதம் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. அதில் எந்த ஒன்றும் கூட்டப்படவும் இல்லை. குறைக்கப்படவும் இல்லை. மனிதக் கருத்து ஒன்று கூட அதில் நுழைக்கப்படவில்லை. இதைத் தனது தனிச் சிறப்பாக திருக்குர்ஆன் சொல்லிக் காட்டுகிறது.

"இதை நாமே அருளினோம்; இதை நாமே பாதுகாப்போம்" என்று இறைவன் உத்தரவாதம் அளிப்பதை **"குர்ஆன் 15:9"** வசனத்தில் காணலாம். இவ்வசனத்தில் கூறப்பட்டதற்கு இணங்க அன்று முதல் இன்று (1445 வருடமாக) வரை பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அதே போன்று, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலும் பாதுகாக்கப்பட்டுள்ளன. அதில் இடைச்செருகல்களை சில அறிவீனர்களும், கயவர்களும் நபிகளாரின் காலத்திற்குப் பின் சேர்த்திருந்தாலும் அவற்றைக் கண்டுபிடித்து, களையெடுத்து, சரியானதைப் பிரித்துக் காட்டும் அரும் பணியை நபிகள் நாயகம் (ஸல்) மரணித்து நூறு வருடங்களுக்குள் அறிஞர்கள் வழியாக இறைவன் நிறைவேற்றி விட்டான்.

நபிமொழிகளில் ஏதேனும் இடைச்செருகல் இருந்தால் குர்ஆனுடன் உரசிப் பார்த்து அவற்றைக் கண்டுபிடித்து விட முடியும்.

குர்ஆன் 100 சதவிகிதமும், நபிமொழிகள் தேவையான அளவுக்கும் பாதுகாக்கப்பட்டிருக்கும் போது இன்னொரு நபி வரவேண்டிய எந்த அவசியமும் இல்லாமல் போய் விடுகிறது.

ஒவ்வொரு காலத்திலும் தூதர்களை இறைவன் அனுப்பும் போது, அந்தச் சமுதாயத்தினரின் நிலையைக் கவனித்து அதற்கேற்ற சட்டங்களுடன் அனுப்பினான். இதனால் ஒரு காலத்து மக்களுக்கு இறைவன் அனுப்பிய வேதமும், தூதரின் போதனையும் அடுத்த

காலத்தவருக்குப் பொருந்தாமல் போய் விடலாம்.

ஒரு நபி மரணித்த பின், அந்த நபியின் போதனை அடுத்து வரும் தலைமுறைக்குப் பொருந்தாது என்ற நிலை ஏற்படும் போது இன்னொரு வேதம் அருளப்படும் அவசியம் ஏற்படுகிறது.

அது போல், ஒரு தூதரின் காலத்தில் அருளப்பட்ட சட்டங்களை விட அதிகச் சட்டங்களை அடுத்து வரும் சமுதாயத்திற்குக் கூற வேண்டிய நிலை வந்தால் அப்போதும் இன்னொரு தூதரின் வருகை அவசியமாகும்.

குர்ஆனைப் பொறுத்தவரை இந்த நிலை இல்லை.

அது அருளப்படும் போதே உலகம் முழுவதற்கும் பொருந்தும் வகையிலும், அனைத்துக் கட்டளைகளும் முழுமைப்படுத்தப்பட்ட நிலையிலும் அருளப்பட்டது.

அதில் எந்த ஒன்றையும் சேர்க்கவோ, நீக்கவோ, திருத்தவோ அவசியமில்லாத அளவுக்கு நிறைவாக உள்ளது.

இப்போது ஓர் இறைத்தூதர் வந்தால், அவர் கொண்டு வரும் வேதம் எந்தத் தரத்தில் இருக்குமோ அந்தத் தரத்தில் குர்ஆன் பாதுகாக்கப்பட்டு இருக்கும் போது இன்னொரு வேதமும், தூதரும் வரவேண்டிய தேவையில்லை.

3. "முஹம்மது" என்ற பெயர் கொண்ட நபரின் பிறப்பும், வளர்ப்பும் - இருபத்து ஐந்து வயது வரை!

1400 ஆண்டுகளுக்கு முன்பு உயர்ந்த குலத்தில் ஓர் ஏழைத் தாய்க்கு ஒரு மகன் பிறந்தார். முஹம்மது என்று பெயரிடப் பட்டார். தாயின் கருவறையில் இருக்கும் போது தந்தையை இழந்தார். பாட்டனாரின் பராமரிப்பில் வாழ்ந்தார். ஆறு வயதில் தாயையும் இழந்தார். எட்டு வயதில் பாட்டனாரையும் இழந்தார் பின்பு பெரிய தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்தார் பள்ளிக்கூடம் செல்லவில்லை கல்வி கற்கும் சூழ்நிலையும் இல்லை இவருடைய பெரிய தந்தை ஆடுகளை மேய்க்கும் பணியை ஒப்படைத்தார். எந்தப் பணியைக் கொடுத்தாலும் அதை சிறப்பாகச் செய்யக்கூடிய சிறந்த பண்பாளராக இருந்தார்.

12ஆம் வயதில் பெரிய தந்தையுடன் சிரியா நாட்டுக்குச் சென்று வணிகம் செய்தார். மக்கா நகரத்தில் இருந்த இறை ஆலயத்தை தரிசிக்க ஏராளமான பயணிகள் உலகம் முழுவதிலிருந்தும் வருவார்கள். எனவே முதல் முயற்சியாக சில பொருட்களை வாங்கி வந்து சந்தையில் விற்றுச் சிறிய அளவில் பொருள் ஈட்டினார்.

தொழில் நேர்மை, நியாயம், அதிக லாபம் இன்மை, பொருளில் ஏதாவது பழுது ஏற்பட்டு இருந்தால் அதை மறைக்காமல் மக்களிடம் கூறி விற்பனை செய்தல் ஆகிய உயர் பண்புகள் அவரிடம் இருந்தன. போலிப் பொருள்களை விற்பது என்பதே இல்லை அளவை நிறுவையில் மோசடி செய்யாமல் நேர்மையாக நடந்து கொண்டார். உணவுப் பொருள்கள் ஈரமாக இருந்தால் அதை உலர வைத்துச் சரியான எடைக்குக் கொடுக்கும்படி அறிவுரை கூறுவார். எல்லாவற்றுக்கும் மேலாக பொய் சொல்லாமை, இத்தகைய அழகிய நற்பண்புகள் பேரியல்புகள் அனைத்தும் இருந்ததால் இவரது தனிப்பட்ட பண்பு நலன்கள் மக்களை கவர்ந்தன.

மக்கள் மத்தியில் உயர்ந்த பண்பாளர், உண்மை

பேசுபவர், பொய் உரைக்காதவர், நியாயமான வர்த்தகர் எனப் புகழ் பெற்றார். மக்கள் இவரை "அல்அமீன்" - நம்பிக்கையாளர் என்றும் "அஸ்ஸாதிக்" - உண்மையாளர் என்றும் அழைத்தனர் அந்தக் காலத்தில் வங்கி இல்லாததால் பணம், பொருட்களை நம்பிக்கையுடன் கொடுத்துவைப்பதற்கு மக்களால் நம்பிக்கையாளர் என்ற பட்டம் சூட்டப்பட்ட நல்ல மனிதர் இவர்தான்.

தம் சொந்த வாழ்வில் ஒழுக்கம், அண்டை அயலாருடன் நல்லுறவு பேணுதல், உபகாரம் செய்தல், தான தர்மம் செய்தல், சிரமப்படுவோரின் சூழ்நிலை அறிந்து வலிய உதவி செய்தல், கடை தெருவுக்குப் பொருள் வாங்கச் சென்றால், பக்கத்து வீட்டில் கேட்டு அவர்களுக்குத் தேவையான பொருளையும் வாங்கி வருதல், பெரியோரிடம் மிகுந்த மரியாதையும் பாசமும் கொள்வது போன்றவை இவருடைய தனிச் சிறப்புகள்.

இதனால் சமூகத்தில் உயர் மரியாதையையும் கண்ணியத்தையும் பெற்றிருந்தார். தொழில் பெருகவே அந்தக் காலத்தில் மிகப்பெரிய சந்தையாக திகழ்ந்த சிரியா தேசத்திற்குச் சென்று மொத்த வியாபாரம் செய்யத் தொடங்கினார் அப்படிப் போகும்போது சிறிய வியாபாரிகளின் பொருள்களையும் உடன் வாங்கி, விற்பனை செய்து கொடுத்தார். அதன் மூலம் சிறிய வியாபாரிகளும் நல்ல விலாபம் அடைந்தனர்.

இப்படித் தன் குணத்தாலும் சிறந்த பண்புகளாலும் மக்களால் போற்றக்கூடிய மனிதராக இவர் விளங்கினார் இந்த காலகட்டத்தில் சமூகத்தில் ஏற்படும் சண்டை தகராறுகளுக்கு மக்கள் இவரிடம் அணுகித் தீர்வு கண்டார்கள். இவரது தனித்தன்மையும், பரந்த உள்ளமும், விசாலமான பார்வையும், புதிய அணுகுமுறையும், பல்வேறு பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து தீர்வு காண உதவின. இதனால் அந்த மக்களிடையே ஒரு மாமனிதராக விளங்கினார். அப்போது இவருக்கு வயது **இருபத்து ஐந்து.**

4. வியாபாரமும், மணமுடிப்பும், குழந்தைகளும், 40 வயது வரை வாழ்க்கையும்

கதீஜா பின்த் குவைலித் (விதவை) சிறப்பும் வளமும் மிக்க வியாபார பெண்மணியாக (40 வயது) மக்காவில் திகழ்ந்தார். தமது வியாபாரத்திற்காக ஆட்களை வேலைக்கு அமர்த்தி அதில் கிடைக்கும் இலாபத்தின் ஒரு பகுதியை அவர்களுக்கு தருவார்.

முஹம்மத் அவர்களின் வாய்மை, நம்பகத்தன்மை கொண்ட நற்பண்புகளைப் பற்றி அன்னார் கேள்விப்பட்டபோது அவர்களை வரவழைத்து தனது அடிமை மைசரவுடன் வணிகப் பொருட்களை எடுத்துக்கொண்டு சிரியா சென்று வணிகம் செய்து வர வேண்டும் என்றும் மற்ற வணிகர்களுக்கு கொடுத்து வந்ததைவிட சிறப்பான பங்கை உங்களுக்கு தருகிறேன் என்ற கோரிக்கையையும் முன் வைத்தார் முஹம்மத் அவர்களும் அதை ஒப்புக் கொண்டார்கள்.

இப்போது தொழிலில் தமது முழு திறமையையும் வெளிப்படுத்தி வெற்றிக்கொண்டார். இவரிடம் இருந்த சிறந்த நெறிகளும், பண்புகளும் கதீஜாவின் மனத்தைக் கவர்ந்தன. தம் தோழியைத் தூது அனுப்பி தம்மைத் திருமணம் செய்ய முடியுமா? என்று வினவினார்.

இவரோ விதவை; வயதோ நாற்பது அவரோ இருபத்தைந்து வயது இளைஞர். அக்காலத்தில் விதவைத் திருமணம் என்ற பேச்சே அதிகம் இல்லை இது நடக்குமா? என்ற சிந்தனையுடனும் குழப்பத்துடனும் கதீஜாவின் மனநிலை இருந்தது. காரணம் நம்முடைய சொத்தை பாதுகாக்கவும் தமக்கு ஒரு வாரிசு வேண்டும் என்ற எண்ணமுமே அதற்கான அடிப்படை காரணம். மாமனிதர் முஹம்மத் அவர்கள் திருமணத்திற்கு ஒப்புதல் அளித்து கதீஜாவை மணம் முடித்தார்கள் ஏறத்தாழ 15 ஆண்டுகள் வாழ்வு இனிமையாக கடந்தது.

இவர்கள் இருவருக்கும் ஆறு குழந்தைகள் பிறந்தன. முதலில் காசிம் என்ற ஆண் குழந்தையும் அதற்குப் பிறகு ஜைனப், ருக்கையா, உம்மு குல்ஸும், ஃபாத்திமா என்ற நான்கு பெண் குழந்தைகளும் அதற்குப் பிறகு அப்துல்லாஹ் என்ற ஆண் குழந்தையும் பிறந்தனர். ஆண் மக்கள் அனைவரும் சிறு வயதிலேயே மரணம் அடைந்து விட்டனர். முதல் மூன்று பெண் மக்களும் முஹம்மத் அவர்களுடைய காலத்திலேயே மரணமடைந்து விட்டனர் நான்காவது பெண் மகளான ஃபாத்திமா முஹம்மது அவர்கள் இறந்து ஆறு மாதங்கள் கடந்த பிறகு இறப்பெய்தினார்கள்

அழகான குழந்தைகள், அமைதியான வாழ்வு, வியாபாரத்தில் வெற்றி, ஏழை எளியவர்களுக்கு உதவுதல், கேட்பதற்கு வெட்கப்படும் நடுத்தர குடும்பத்தினரை தேடிச் சென்று உதவுதல், எளியவர்களுக்கும், வரியவர்களுக்கும் உதவி செய்தல், நேர்மையான வர்த்தகர், பொருளாதாரத்தில் உயர்நிலை. இவை எல்லாம் மக்கள் அவரை மானசீக தலைவராக ஏற்றுக் கொள்ள வைத்தன.அவர் கருத்தை மறுக்காமல் ஏற்றுக் கொள்ளக்கூடிய மன நிலைக்கு வந்து விட்டார்கள்.



5. "நபியாக", "இறுதி தூதராக" இறைவன் முஹம்மது" அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் - ஒரு பார்வை

முஹம்மத் அவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே எல்லா மக்களிடமுள்ள நற்பண்புகள் அனைத்தையும் தனக்குள் ஒருங்கே அமையப்பெற்றிருந்தாரகள். நேரிய சிந்தனை, ஆழ்ந்த பார்வை, நுண்ணறிவு அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தார்கள். நீண்ட மௌனத்தால் ஆழ்ந்த சிந்தித்து உண்மையை அறிவார்கள். தங்கள் முதிர்ச்சியான அறிவாலும் தூய இயற்கை குணத்தாலும் மனித வாழ்வின் பகுதிகளையும், மக்களின் செயல்களையும் சமூகத்தின் நிலைகளையும் தெளிவாக ஆராய்ந்து மக்களிடம் காணப்பட்ட மூடப்பழக்க வழக்கங்களை வெறுத்து ஒதுக்கினார்கள். மக்களுடன் மதிநுட்பத்துடன் பழகுவார்கள். அவர்கள் நன்மையானவற்றில் ஈடுபடும் போது தானும் கலந்து கொள்வார்கள். தீமையானவற்றில் ஈடுபட்டால் அவர்களை விட்டும் தனித்து விடுவார்கள்.

முஹம்மது அவர்கள் மது அருந்தியதில்லை. சிலைகளுக்கு பலியிடப்பட்டதை உண்டதில்லை. சிலைகளுக்கான விழாக்களில் கலந்து கொண்டதில்லை சிலைகளை முற்றிலுமாக வெறுத்தார்கள். லாத் உஜ்ஜா (அந்த காலச் சிலை தெய்வங்களுடைய பெயர்கள்) வை கொண்டு சத்தியம் செய்வதை சகித்துக் கொள்ள மாட்டார்கள்.

இறைவனின் பாதுகாப்பு அவர்களைச் சூழ்ந்திருந்தது உலக இன்பங்களின் மீது ஆசை தோன்றும் போதும், தவறான அறியாமைக்கால பழக்க வழக்கங்களில் மீது ஆவல் ஏற்படும் போதும் அவற்றிலிருந்து அல்லாஹ்வின் அருளால் தடுக்கப்பட்டார்கள். முஹம்மத் அவர்கள் கூறினார்கள் அறியாமை கால செயலை செய்ய வேண்டும் என நான் இருமுறை மட்டுமே விரும்பினேன். அந்த இருமுறையும் அல்லாஹ் என்னைத் தடுத்து விட்டான். பிறகு அல்லாஹ் தூதுத்துவத்தை எனக்கு அருளும் வரை அந்த எண்ணம் ஏற்பட்டதே இல்லை.

ஓர் இரவில் மக்காவில் மேற்பகுதியில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு சிறுவரிடம் என் ஆடுகளை நீ பார்த்துக்கொள். மக்காவில் வாலிபர்கள் இராக்கதை பேசுவது போன்று நானும் பேசி வருகிறேன் என்று நான் கூறினேன். அவர் ஒப்புக்கொண்டார். நான் வெளியேறி மக்காவினால் நுழைந்து அதில் முதல் வீட்டைக் கடந்தேன். அங்கு இசை சப்தத்தை கேட்டு அது என்னவென்று விசாரித்தேன். அதற்கு மக்கள் இன்ன ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் முடிந்து இன்று முதலிரவு என்று கூறினார்கள். நான் அதைக் கேட்க அமர்ந்தவுடன் நான் செவியேற்காத வகையில் அல்லாஹ் என்னை தடுத்து தூங்கச் செய்து விட்டான். இறுதியில் சூரிய வெப்பம்தான் என்னை எழுப்பியது என் தோழரிடம் நான் சென்றபோது அவர் என்ன நடந்ததென விசாரிக்க, நடந்ததை கூறினேன் அதற்குப் பிறகு நான் எந்த ஒரு தீய செயலையும் செய்ய எண்ணியதேயில்லை.

(முஸ்தத்ரகுல் ஹாகிம்)

தம்முடைய 40 ஆம் வயதில் இறைவனைப் பற்றிய சிந்தனையில், தனிமையில் கொஞ்ச காலம் வாழ்ந்தார்கள் மக்கா நகரை விட்டு, சற்று தொலைவில் உள்ள ஒரு மலைக் குகையில் தனித்து அமைதியாக இறைவனை தியானம் செய்து வந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ரமலான் மாதம் முழுவதும் ஹீரா குகைக்குச் சென்று தனிமையில் இருந்து வந்தார்கள். 40ம் ஆண்டு ஹீரா குகையில் ஆறு மாதம் தனிமையில் இருந்தார்கள். பல நாட்கள் அங்கேயே தனிமை தவம் இருந்தார்கள். இவருக்கு அவருடைய மனைவி உணவு கொண்டு போய் கொடுத்து வருவார்கள் தன் கணவரின் குறிப்பறிந்து அவரை விருப்பத்திற்கு இசைந்து வாழ்ந்தார்கள் குகையில் தனித்து அமைதியாக இறைவனை தியானம் செய்து வந்தார்கள்.

6. நபியாக, இறைவனின் தூதராக, இறுதி தூதராக முஹம்மது அவர்களை இறைவன் தேர்ந்தெடுக்கும் ஆரம்பகால நிகழ்வுகள்

தனிமையின் மீதான அவர்களின் விருப்பம் இறைவனின் ஏற்பாடு என்று சொல்லலாம். முஹம்மது அவர்கள் இதற்கு முன் உலக அலுவல்களில் ஈடுபட்டு வந்தார்கள். வியாபாரம் செய்து வந்தார்கள். இப்போது இவை அனைத்தையும் விட்டு தனிமை நாடுகிறார்கள். ஏனெனில் மாபெரும் பொறுப்பை சுமக்க அவர்கள் தயாராக வேண்டும். உலக வரலாற்றை மாற்றி மக்களுக்கு நேரிய பாதையைக் காட்ட ஆயத்தமாக வேண்டும். இவ்வாறு நபித்துவம் வழங்குவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தனிமையின் மீதான விருப்பத்தை இறைவன் அவர்களுக்கு ஏற்படுத்தினான்.

ஹீரா குகையில் இப்படியாக தனிமைத் தியானம் செய்து கொண்டிருந்தபோது ஒரு நாள் முஹம்மது முன்பு ஒளிமயமான வானவர் தலைவர் தோன்றினார். இதை கண்டதும் என்ன ஏது என்று தெரியாமல் அதிர்ச்சியுற்று கலக்கம் அடைந்து உடல் நடுங்கினார்கள். அப்போது அந்த வானவர் **"ஓதுவீராக"** என்று கூறினார்கள். **"நான் கல்வி கற்காதவன், எனக்கு ஓத தெரியாது"** என்று முஹம்மது பதில் கூறினார்கள் அந்த வானவர் முஹம்மதை மூன்று முறை கட்டி அனைத்துப் பின்னர் **"உன்னையும் என்னையும் படைத்த இறைவனின் திருப்பெயர் கொண்டு ஓதுவீராக. நீர் இறைவனுடைய தூதராகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளீர். நான் இறைச்செய்தியைக் கொண்டு வரும் வானவர் தலைவன்"** என்று கூறி மறைந்தார்.

மனம் பதப்பதைக்க வீட்டுக்கு வந்து சேர்ந்தார் முஹம்மது அவர்கள். தம் மனைவியிடம் "எனக்கு ஏதோ ஆகிவிட்டது, என்னை போர்த்தி விடு, என் உடல் வியர்கின்றது, எனக்கு உடல் நடுங்குகின்றது" என்று கூறினார்கள்.

நடந்ததை கேட்டறிந்த கதீஜா அவர்கள் பின்வருமாறு ஆறுதல் கூறினார்.

"அப்படி ஒன்றும் ஆகாது, நீங்கள் ஆறுதல் அடையுங்கள். இறைவன் மீது ஆணையாக, உங்களை இறைவன் ஒருபோதும் இழிவுபடுத்த மாட்டான். ஏனெனில் நீங்கள் உறவுகளைப் பேணி நடக்கின்றீர்கள், உண்மையை மட்டும் பேசுகின்றீர்கள், சிரமப்படுவோரின் பாரத்தைச் சுமக்கின்றீர்கள், வரியவர்களுக்காகப் பாடுபடுகின்றீர்கள், விருந்தினர்களை உபசரிக்கின்றீர்கள், சத்திய சோதனையில் ஆட்படுவோருக்கு உதவி செய்கின்றீர்கள், எனவே நீங்கள் அஞ்ச வேண்டாம்" என்று ஆறுதல் கூறினார்கள்.

இங்கு ஒரு விஷயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவர்கள் ஹீரா குகையில் தனிமையில் இருந்த வணக்கத்தையோ, இறை தியானத்தையோ குறிப்பிட்டு ஆறுதல் கூறவில்லை. ஒரு குழப்பமான சூழ்நிலையில் தனக்கு ஏதாவது விபரீதம் நடக்கும் என்று எண்ணும் போது - மனிதன் நாடுவது இறைவனைத்தான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இறைவணக்கம்தான் - இறைவனிடம் பிரார்த்தனை செய்வதுதான் மனித இயல்பு.

ஆனால் கதீஜா அம்மையார் கூறுவதை நாம் கவனிக்க வேண்டும் இங்கு முஹம்மது அவர்களின் நற்குணத்தையும் நற்செயலையும் இறைவனிடம் முன்னிறுத்திக் கதீஜா அம்மையார் ஆறுதல் கூறுகின்றார்கள். ஒவ்வொரு மனிதனும் இறை நம்பிக்கையோடு இருந்தாலும் சமூகம் சார்ந்த நற்செயலுக்கு முன்னுரிமை கொடுப்பது முக்கியம் என்பது நாம் பின்பற்ற வேண்டிய கடமை என்பதை நினைவு கூர வேண்டும்.

பின்னர் முஹம்மது அவர்களை கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்த **வராகா** என்ற பாதிரியாரிடம் கதீஜா பெரும்மாட்டியால்

அழைத்துச் செல்லப்பட்டார். **வராகா** வயதில் முதியவராகவும் அரபு மற்றும் ஹீப்ரு மொழிகளில் புலமை பெற்றவராகவும் இருந்தார். நடந்த சம்பவங்களையும் தம் கணவருக்கு குகையில் வானவர் காட்சி அளித்ததையும் கதீஜா விளக்கிக் கூறினார்.

அனைத்தையும் கவனமாக கேட்ட **வராகா** அவர்கள், **இது உண்மை என்றும், இந்த வானவர் தலைவர்தான் மூசா மற்றும் இயேசு ஆகியோருக்கும் அதற்கு முன்பு தோன்றிய இறைத்தூதர்கள் அனைவருக்கும் இறைச்செய்தியைக் கொண்டு வந்தவர் என்றும், நீங்களும் அவ்வாறே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறைத்தூதர் ஆவீர்** என்றும் விளக்கம் அளித்தார்.

உங்கள் சமூகத்தார் உங்களை ஊரிலிருந்து வெளியேற்றும் சமயத்தில் நான் உயிருடன் திடகாத்திரமான இளைஞனாக இருக்க வேண்டுமே என்று வராக அங்கலாய்த்தார். முஹம்மது அவர்கள் 'மக்கள் என்னையா வெளியேற்றுவார்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு வராக 'ஆம், நீங்கள் கொண்டு வந்திருப்பது போன்று சத்தியத்தைக் கொண்டு வந்த எந்த தூதரும் (மனிதரும்) மக்களால் பகைத்துக் கொள்ளப்படாமல் இருந்ததில்லை. (நீங்கள் வெளியேற்றப்படும்) அந்நாளில் நான் உயிருடன் இருந்தால் உங்களுக்கு பலமான உதவி செய்வேன்" என்று கூறினார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் வராகா குறுகிய காலத்தில் இறந்து விட்டார்.

ஆக சாதாரண மனிதராக இருந்த **முஹம்மது அவர்கள் இந்த நிகழ்வுக்கு பிறகு "நபியாக", "இறைவனுடைய தூதராக" மற்றும் உலகம் அழியும் வரை பிறக்கும் மக்களுக்கான "இறுதி தூதராக" முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஆகிறார்கள்.**

முக்கிய குறிப்பு:

1. தமிழில் எப்படி கடவுளே! இறைவா! என்று அழைக்கிறோமோ, அதே போல் ஆங்கிலத்தில் "God" என்று அழைக்கிறோமோ அதே போல் முஹம்மது நபிகள் வாழ்ந்த இடம் அரபு தேசம் (இன்றைய சவுதி அரேபியாவில் உள்ள "மக்கா" நகரம்) அங்கு பேசப் படும் மொழி "அரபி". அரபி மொழியில் "இறைவா" / "கடவுளே" என்ற வார்த்தைக்கு **"அல்லாஹ்" (ஒரே இறைவன்)** என்று பொருள். ஏனெனில் அல்லாஹ் என்ற அரபிச் சொல்லுக்கு ஆண்பால், பெண்பால் மற்றும் பலர்பால் இல்லை. ஆதலால் உலகம் முழுமையும் ஒரே இறைவனை ஏற்றுக் கொண்ட மக்கள் எந்த மொழி பேசுபவர்களாக இருந்தாலும் **"அல்லாஹ்"** என்றே அழைக்கிறார்கள்.

அல்லாஹ் என்பது முஸ்லிம்களுக்கு சொந்தமான கடவுளோ, அலலது தனிக் கடவுளோ அல்ல என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ளவும். இந்த அத்தியாயத்தில் இருந்து நாம் இறைவன் என்ற வார்த்தைக்கு பதிலாக **"அல்லாஹ்"** என்ற வார்த்தையை பிரயோகிப்போம்.

2. இதற்க்கு பிறகு **முஹம்மது** அவர்களைக் குறிப்பிடும்போது, அவர்கள் இறைத்தூதராக இறைவன் தேர்நதெடுத்துவிட்ட படியால் முஹம்மது என்ற பெயருக்குப் பின் (ஸல்) என்று சுருக்கமாகக் குறிப்பிட ஆரம்பிப்போம்.

மேலும் **'முஹம்மது'** என்று கூறுவதற்க்கு பதிலாக தமிழ் மொழியில் நடைமுறையில் உள்ள மற்றும் அனைவருக்கும் பரிச்சயமான **"நபிகள் நாயகம் (ஸல்)"** அல்லது **"நபி (ஸல்)"** என்று கூற ஆரம்பிப்போம்.

வாசகர்கள் விளங்கிக் கொள்வதற்காக (ஸல்) என்பது **'ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்'**

(அரபு மொழி **صلى الله عليه وسلم**) - என்பதன் சுருக்கமாகும். இதன் பொருள் **"அல்லாஹ் (நபி) அவர்கள் மீது கருணையும் சாந்தியும் பொழிவானாக"** என்பதாகும்.

இப்படி சொல்லச் சொல்லி அல்லாஹ்வே குர்ஆனில் ஒரு வசனத்தில் குறிப்பிடுகிறான். குர்ஆனை நீங்கள் படிக்கும்பொழுது இதை தெரிந்து கொள்ளலாம்.

3. அல்லாஹ் முஹம்மது நபியை இறுதித் தூதராக தேர்ந்தெடுத்தது அவர்களுடைய 40வது வயதில். அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் (இடம் பெயர்ந்து) போனது 53வது வயதில். இடைப்பட்ட இந்த 13 ஆண்டுகளில் அல்லாஹ் ஏறக்குறைய 82 (குர்ஆனில் மொத்தம் 114) அத்தியாயங்களை முஹம்மது நபிக்கு இறைச் செய்தியாக கொஞ்சம் கொஞ்சமாக சூழ்நிலைக்கு தக்கவாறு அருளினான். வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.

அல்லாஹ் இறக்கி அருளிய மக்கா அத்தியாயங்களின் தனித்தன்மைகள்:

1) ஏகத்துவத்து (ஓரிறைக் கொள்கைகளு)க்கான அழைப்பு, தூதுத்துவம் மற்றும் மறுமை வாழ்வை உறுதிப்படுத்துதல், மறு உலக (இறந்தபின் எழுப்பப்பட்டு விசாரிப்பதற்காக உள்ளாகும்) வாழ்வு, சொர்க்கம், நரகம் ஆகியவற்றை கூறுதல், அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் மூலம் மற்ற இணை வைத்து வணங்குபவர்களுடன் தர்க்கம் செய்தல்.

2) சட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான பொதுவான அடிப்படைகளை எடுத்துவைத்தல் சமுதாயத்தில் இருக்கவேண்டிய சிறந்த குணநலன்களை எடுத்துக்கூறல், இணை வைத்து வணங்குபவர்களின் பாவங்களையும் தீய பழக்கங்களையும் விவரித்தல்.

3) சத்தியத்தை மறுப்பவர்கள் படிப்பினை பெறுவதற்காகவும், நபி(ஸல்) அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காகவும் முற்கால நபிமார்களின் சரித்திரத்தையும் முற்கால சமுதாயத்தினர் சரித்திரத்தையும் எடுத்துக் கூறல்.

4) உள்ளத்தை உலுக்கும் படியான கடுமையான வார்த்தைகளை சுருக்கமாக இடம் பெறுதலும் ஆயத்துக்கள் சுருக்கமாக இருத்தலும்.

ஆகியவைகளை மேற் சொன்ன 82 அத்தியாங்களில் மிக விரிவாக காணலாம்.

வாசகர்கள் குர்ஆனை இலவசமாக பெற்று கண்டிப்பாக அனைத்து வசனங்களையும் படித்து பார்த்து தெளிவு பெறவும். இன்ஷா அல்லாஹ்!



7.ஓரிறைக் கொள்கையின் பக்கம் மக்களை அழைத்தலும், எதிர்ப்பு அலையும், 13 ஆண்டுகள் மக்காவில் பரப்புரையும்

நபி (ஸல்) அவர்கள் ஆரம்பமாக குடும்பத்தார் மற்றும் நண்பர்களில் தனது நம்பிக்கைக்குறிவர்களுக்கு ஓரிறைக் கொள்கையை-இஸ்லாமை-அறிமுகப்படுத்தினார்கள். உண்மையை நேசிப்பவர், நல்லவர் என தான் எண்ணியவர்களுக்கும் ஏகத்துவ அழைப்பை விடுத்தார்கள். நபி (ஸல்) அவர்களை எந்த வகையிலும் சந்தேகிக்காத ஒரு கூட்டம் அவர்களின் அழைப்பை ஏற்றது. இவர்களில் முதன்மையானவர் நபி (ஸல்) அவர்களின் துணைவியான கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் பின்னர் நபி அவர்களின் அடிமை செய்து இப்னு ஹாரிஸா (ரலி) நபி அவர்களின் பராமரிப்பில் இருந்த சிறுவர் அலி (ரலி) உற்ற தோழரான அபூபக்கர் (ரலி) ஆகிய அனைவரும் அழைப்புப் பணியின் முதல் நாளிலேயே ஓரிறைக் கொள்கையை - இஸ்லாமை - தழுவினார்கள்.

பகிரங்க அழைப்பு:

தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் மலைக்குகை சென்று தியானம் செய்து வந்தார்கள். வானவர் (ஜிப்ரீல்) மூலம் இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களுக்கு அவ்வப்போது இறைச்செய்தியும் வந்து கொண்டு இருந்தது. ஒரு நாள் இறைவனிடம் இருந்து **"இறைவன் ஒருவனே என்ற செய்தியை உறவினர்களிடம் பகிரங்கமாக எடுத்துக் கூறும்படி"** கட்டளை வந்தது தம் உறவினர்களையும் ஊர் மக்களையும் தான் ஒரு செய்தி கூற உள்ளதாகவும் அனைவரும் ஸஃபா என்ற மலை அடிவாரத்திற்கு வருமாறும் அழைப்பு விடுத்தார்கள் இதைச் செவியுற்ற மக்கள் மலையடிவாரத்தில் திரளாக கூடினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அப்போது "இம்மலைக்குப் பின்னாலுள்ள கணவாயில் உங்களைத் தாக்குவதற்காகக் குதிரை வீரர்கள்

குவிந்துள்ளார்கள் என்று நான் கூறினால் என் பேச்சை நீங்கள் நம்புவீர்களா?" என்று கேட்டார்கள். "நாங்கள் நிச்சயம் நம்புவோம்: ஏனென்றால் நீங்கள் பொய் கூற மாட்டீர்கள்" என்று குழுமியிருந்த மக்கள் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் **"உங்களையும் என்னையும் படைத்தவன் ஒரே இறைவனே. அவன் உருவமற்றவன். அவனே அகிலத்து மக்களையும் அண்ட சராசரத்தையும் படைத்தவன் அனைத்துப் படைப்புகளின் மீதும் ஆதிக்கம் செலுத்தக்கூடியவன். அவனுக்கு இணை, துணை இல்லை. அவன் ஒருவனே வணக்கத்திற்குரியவன். நம் மூதாதையர்களும் நாமும் வணங்கும் உருவங்கள் எந்த சக்தியும் அற்றவை. இவற்றை வணங்கக்கூடாது. இறைவனால் படைக்கப்பட்டவன் மனிதன். அந்த மனிதனால் படைக்கப்பட்டவை இறைவன் ஆக முடியாது"** என்றும் **"நான் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறைத்தூதர் ஆவேன்"** என்றும் கூறினார்கள்.

எதிர்ப்பு அலை:

இதைக் கேட்ட மக்கள் அவர் மீது மண்ணை அள்ளி வீசி, "நீ நாசமாகப் போவாய், எங்கள் மூதாதையர்கள் வணங்கிய உருவங்கள் கடவுள் இல்லை என்று கூறுகின்றாயா?" என்று வசைபாடிக் களைந்து சென்று விட்டனர். பெரும்பாலோர் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் **சிலர் அவருடைய கொள்கையை ஏற்றுக் கொண்டனர்**.

அக்காலத்தில் லாத், உஸ்ஸா, மனாத் என்ற கடவுள்களைப் பாரம்பரியமாக வணங்கி வந்தார்கள். சிலர் ஏக இறைவனாகிய அல்லாஹ்வையும் இந்த உருவக் கடவுள்களையும் ஒன்றாக வணங்கி வந்தார்கள்.

ஆனால் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்

உருவமற்ற ஓரிறைக் கொள்கையையே வலியுறுத்தி பரப்புரை செய்தார்கள்.

ஏக இறைவனை மறுத்து உருவங்களை மட்டும் வணங்குபவர்களை அரபு மொழியில் **காஃபிர்** (நிராகரிப்பவர்) என்று அழைப்பார்கள்.

எல்லாம் ஒன்றுதான் என்று அனைத்தையும் வணங்குபவர்களை **"முஷ்ரிக்" (இணைவப்பவர்)** என்று அழைப்பார்கள்.

ஓரிறைக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களை **"முஸ்லிம்"** (ஓர் இறைவனுக்குக் கட்டுப்பட்டவர்) என்று அழைப்பார்கள்.

"முஸ்லிம்கள்", "முஷ்ரிக்குகள்", "காபிர்கள்" என மும்முனையில் விவாதம், பிரச்சாரம், வசை பாடுதல் என்று மக்காவே கலவரமானது. ஒருவரை ஒருவர் **வசைபாடினார்கள்**. இந்தக் காலகட்டத்தில் தான் முஸ்லிம்களுக்கு இரண்டு வகையான கட்டளைகளை இறைவசனமாக வந்தன.

அல்லாஹ்யன்றி (வேறு யாரை தெய்வங்களாக) அவர்கள் அழைக்கிறார்களோ அவர்களை நீங்கள் ஏசாதீர்கள். (அவ்வாறு ஏசினால்) அவர்கள் அறிவின்றி எல்லை மீறி அல்லாஹ்வை ஏசுவார்கள். (குர்ஆன் 6 :108)

உருவங்களை வணங்குபவர்களுக்காக இந்த இறை வசனம் இறங்கியது...

1. (நபியே) கூறுவீராக! ஓ நிராகரிப்பாளர்களே!
2. நீங்கள் வணங்குகின்ற கடவுள்களை நான் வணங்குவதில்லை.
3. நான் வணங்குகின்ற கடவுளை நீங்கள் வணங்கக் கூடியவர்கள் அல்ல.

4. நீங்கள் வழிபடுவதைப் போல் நான் வழிபடக்கூடியவன் அல்ல.
5. நான் வழிபடுவதைப் போல் நீங்கள் வழிபடக்கூடியவர்கள் அல்ல.
6. உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு! என்னுடைய மார்க்கம் எனக்கு!

குழப்பமான நேரத்தில் அல்லாஹ் இறைத்தூதர் மூலம் **முஸ்லிம்களுக்கு இவ்வாறு வழிகாட்டப்பட்டது. இதையே இன்றளவும் முஸ்லிம்கள் பின்பற்றி வருகின்றார்கள்.**

சுமார் **13 ஆண்டுகள்** ஓரிறைக் கொள்கைப் பரப்புரையை மக்காவில் தொடர்ந்து செய்தார்கள். ஒரு பகுதி மக்கள் ஏற்றுக் கொண்டாலும் பெரும் பகுதி மக்கள் கடும் எதிர்ப்பைக் காட்டினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரப்புரை வேகமாக பரவ ஆரம்பித்ததும், நிராகரிப்பாளர்கள் சமாதானத்திற்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். என்ன வேண்டும் ஆட்சியா?, செல்வமா?, அதிகாரமா? பெண்ணா? எது வேண்டுமானாலும் தருகின்றோம். உங்கள் பரப்புரையைக் கைவிட வேண்டும் என்று பேரம் பேசப்பட்டது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இவ்வாறு உறுதிப்பட கூறினார்கள்

"ஒரு கையில் சூரியனையும் மறுகையில் சந்திரனையும் கொடுத்தாலும் இறைவன் ஒருவனே என்ற கொள்கையை கைவிட மாட்டேன்"

சமகாலத்தில் இந்தக் கொள்கை மக்காவிற்கு அக்கம் பக்கம் உள்ள நகரங்களில் பரவி பேசும் பொருளானது.

இப்போது எதிரிகள் தீவிரமாக ஆலோசனை செய்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கொலை செய்து விடுவது என்று முடிவு செய்தார்கள்.

8. ஹிஜ்ரா (நாடு துறத்தல்), மக்காவைவிட்டு மதீனாவிற்க்கு...

மக்கா நகரில் இருந்து சுமார் 300 மைல் தொலைவில் உள்ள மதீனா நகர மக்கள் பெரும்பாலும் ஓரிறைக் கொள்கையை ஏற்று இறைத்தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முழுமையாக ஏற்றுக் கொண்டார்கள்.

மக்காவில் இருக்கும் முஸ்லிம்களுக்கு மதினாவை நோக்கி ஹிஜ்ரா (பயணம்) செய்ய அல்லாஹ்வின் தூதர் அனுமதி அளித்தார்கள்.

'ஹிஜ்ரா' என்றால் தனது எல்லா உலக ஆதாயங்களையும் இழந்து சொந்த மண்ணில் உள்ள உடமைகளை அப்படியே விட்டுவிட்டு தன்னையும் தனது (நம்பிக்கையையும்) மார்க்கத்தையும் காப்பாற்றிக் கொள்ள தனது சொந்த நாட்டை, சொந்த ஊரைத் துறந்து அந்நிய நாட்டுக்கு, அந்நிய ஊருக்கு செல்வதாகும். செல்லும் வழியில் அல்லது செல்வதற்கு முன் பல ஆபத்துக்களை சந்திக்க வேண்டி வரும். உயிர் பறிபோகலாம், உடைமைகள் அபகரிக்கப்படலாம், செல்லும் இடத்தில் எத்தகைய எதிர்காலத்தை முன்னோக்க வேண்டி இருக்குமோ? அங்க என்னென்ன கவலைகளும் துக்கங்களும் துயரங்களும் மறைந்து இருக்கின்றனவோ? என்று எதுவும் அறியாத நிலையில் மேற்கொள்ளப்படும் பயணமே ஹிஜ்ராவாகும்.

முஸ்லிம்களில் பலர் மக்காவை விட்டு ஹிஜரா செய்து விட்டனர் நபி ஸல் அவர்களும் அவர்களின் கட்டளையின் படி தங்கியிருந்த அபூபக்கரும் (ரலி) இன்னும் நிர்ப்பந்தத்தில் இருந்த முஸ்லிம்கள் மட்டும் தான் மக்காவில் தங்கி இருந்தனர். நபி (ஸல்) அவர்கள் ஹிஜிராவிற்கு உண்டான முழு தயாரிப்பும் செய்திருந்தார்கள் எனினும் **அல்லாஹ்வின் கட்டளையை எதிர்பார்த்து இருந்தார்கள்**

அவ்வாறே அபூபக்கர் (ரலி) அவர்களும் பிரயாணத்திற்கு தேவையான முழு தயாரிப்பும் செய்திருந்தார்கள். (ஜாதுல் மாஆத்) தம்மைக் கொல்லச் சதி செய்வது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தெரிந்து விட்டது. எதிரிகள் பலசாலிகளாகவும் பெரும் கூட்டத்தினர் என்பதாலும் இவர்களின் கொலை முயற்சியில் இருந்து தப்பிக்க தம்முடைய முழு நம்பிக்கைக்குறிய தோழர் அபூபக்கர் அவர்களுடன் தம்மை நேசிக்கின்ற மதீனா நகருக்கு இரவோடு இரவாக பல சிரமங்களுக்கிடையில் எதிரிகளின் சூழ்ச்சியில் இருந்து அல்லாஹ் ஏற்படுத்திய பாதுகாப்பில் பயணம் செய்தார்கள். மக்காவை விட்டு வெளியேறி விட்டார்கள் மதினா நகர மக்களும் அவர்களை வரவேற்று, தலைவராக்கி தோழர்கள் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

இது நடந்த ஆண்டு கி.பி 622 செப்டம்பர் 27. முஸ்லிம்களின் உபயோகத்தில் உள்ள ஹிஜ்ரி ஆண்டு கணக்கு நபி (ஸல்) மக்காவில் இருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா சென்ற இந்த ஆண்டிலிருந்து கணக்கிடப்படுகிறது.



9. ஆரம்ப கால மதீனா வாழ்க்கை

இதற்க்கு முன் **யத்ரிப்** என்று பெயர் கூறப்பட்டு வந்த அந்த நகரம் அன்றிலிருந்து மதினத்துர் ரசூல் - இறைத்தூதரின் பட்டணம் - என்று அழைக்கப்பட்டது இதையே சுருக்கமாக இன்று அல்-மதீனா என்று கூறப்படுகிறது நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் மதீனாவிற்குள் நுழைந்த அன்னாள் மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியும் ஆனந்தமும் நிறைந்த நாளாக இருந்தது.

மதீனாவிற்கு வந்த உடனே நபி (ஸல்) முதலில் ஒரு பள்ளிவாசலை - இறையில்லத்தை (தொழுவும் இடத்தை) கட்டினார்கள். பின்னர் மக்காவைத் துறந்து வந்த தோழர்களுக்கும் மதினாவாசிகளுக்கும் இடையே சகோதரத்துவ ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அதன்மூலம் மிகச்சிறந்த இஸ்லாமியச் சமுதாயத்தை உருவாக்கினார்கள்.

நபி ஸல் மதீனாவில் அரசியல் அமைப்பு சட்ட ஒழுங்கு ஆகிய அனைத்தையும் **இறைக் கட்டளைப்படி** நிறுவினார்கள்

நாற்பதாவது வயதில் வானவர் தோன்றி நபி (ஸல்) அவர்களை இறைத் தூதராக ஆக்கியதிலிருந்து இறைச் செய்தி /கட்டளை தொடர்ந்து சூழ்நிலையை கருத்தில் கொண்டு வந்த வண்ணமாக உள்ளது.

முதன்முதலாக முஸ்லிம்களுக்கு மத்தியில் நிலைத்தன்மையையும் ஒருமைப்பாட்டையும் இறைவனின் கட்டளைப்படி நிறுவினார்கள். அதன் மூலம் மதீனாவில் புதிய இஸ்லாமிய சமுதாயத்திற்கும் சமூகத்திற்குமான அடித்தளத்தை மிக ஆழமாக உறுதிப்படுத்தினார்கள்.

அடுத்த கட்டமாக முஸ்லிம் அல்லாதவர்களுடன் தங்கள் சமூக தொடர்புகளை முறைப்படுத்த தொடங்கினார்கள். அதற்கு

காரணம் முழு மனித சமுதாயமும் நிம்மதி, பாதுகாப்பு, நற்பயன்கள், நல்லுறவுகள் கிடைக்கப்பெற வேண்டும் என்பதுதான். ஆகவே சுயநோக்கங்களும் இனவெறியும் நிரம்பி இருந்த அக்காலத்தில் எங்கும் காணப்படாத மன்னித்தல், பெருந்தன்மையுடன் நடத்தல், விட்டுக்கொடுத்தல், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சட்டங்களை நபி (ஸல்) அவர்கள் **இறைக்கட்டளைப் படி** அமைத்தார்கள்.

யூதர்களுடன் ஒப்பந்தம்

மதினாவிற்கு அருகில் யூதர்கள்தான் முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தார்கள். இவர்கள் முஸ்லிம்கள் மீது உள்ளத்தில் பகைமையை மறைத்து வைத்திருந்தாலும், வெளிப்படையாக முஸ்லிம்களை எதிர்க்கவும் இல்லை. அவர்களிடத்தில் சண்டை சச்சரவு செய்யவுமில்லை. எனவே **நபி (ஸல்) அவர்கள் யூதர்களுடன் நன்மையான நல்ல உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களுக்கு அவர்களின் செல்வத்திலும் மதத்திலும் முழு சுதந்திரம் அளித்தார்கள் அவர்களை மதீனாவை விட்டு விரட்ட வேண்டும் என்றோ அல்லது அவர்களுடைய சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்றோ அவர்கள் நாடவும் இல்லை அதை செய்யவும் இல்லை.**

மதீனாவில் முஸ்லிம்கள் நிம்மதியுடன் வாழ்ந்து வருவது மக்காவிலிருந்த இறை நிராகரிப்பாளர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. முஸ்லிம்களை ஒழிக்காத வரை ஓயமாட்டோம் என்று கிளம்பி அவர்கள் பல போர்களை தொடுத்து வந்தார்கள்.



10. போர்கள் - ஒரு கண்ணோட்டம்

மதீனாவில் நிம்மதியுடன் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு மக்காவிலிருந்த எதிரிகள் முஸ்லிம்கள் மீது அத்து மீறுவதை நிறுத்திக் கொள்ளவில்லை. தங்கள் அடாவடி அழிச்சாட்டியங்களை முடித்துக் கொள்ளவில்லை. முஸ்லிம்கள் தங்களிடமிருந்து தப்பித்து மதினாவில் நிம்மதியான பாதுகாப்பான இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார்களே என்று கோபத்தால் கொதித்து எழுந்தார்கள். எப்படியாவது முஸ்லிம்களை மதினாவில் இருந்து வெளியேற்றி விட வேண்டும் என்று தீர்மானமாக இருந்தார்கள்.

போர் புரிய அனுமதி:

மக்காவில் இருந்த நிராகரிப்பாளர்கள் தங்களின் வழிகேட்டிலிருந்து விலகிக் கொள்ளாமல் வம்புத்தனத்தையும் அழிச்சாட்டியங்களையும் தொடர்ந்து கொண்டே சென்றனர் இதன் காரணமாக அல்லாஹ் நிராகரிப்பவர்களை எதிர்த்து போர் புரியலாம் என்று முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கினான். ஆனால் போரை கடமையாக்கவில்லை. நிராகரிப்பவர்கள் சண்டையிட்டால் அவர்களை எதிர்த்துப் போர் புரிய மட்டும் அனுமதிக்கப்பட்டது

(நிராகரிப்பவர்களால்) அநியாயத்தில் சிக்கி, போருக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட (நம்பிக்கை கொண்டவர்)களுக்கு அவர்களை எதிர்த்து போர் புரிய அனுமதி அளிக்கப்பட்டு விட்டது நிச்சயமாக அல்லாஹ் இவர்களுக்கு உதவி செய்ய பேராற்றலுடையவனாக இருக்கிறான். (குர்ஆன் 22:39)

மேலும் இவ்வாறு அறப்போர் செய்வது அனுமதிக்கப்பட்டதற்குரிய காரணத்தையும் அடுத்துள்ள வசனங்களில்

அல்லாஹ் விவரித்தான் அதாவதுட அசத்தியத்தை அழித்து அல்லாஹ்வின் கட்டளைகளை நிலை நிறுத்துவதற்காக தான் போர் செய்வது அனுமதிக்கப்பட்டது

இவர்கள் (எத்தகையோரென்றால்) நியாயமின்றித் தம் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டார்கள்; "எங்களுடைய இறைவன் ஒருவன்தான்" என்று அவர்கள் கூறியதைத் தவிர (வேறெதுவும் அவர்கள் சொல்லவில்லை); மனிதர்களில் சிலரைச் சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின் ஆசிரமங்களும் கிறிஸ்தவக் கோயில்களும், யூதர்களின் ஆலயங்களும், அல்லாஹ்வின் திரு நாமம் தியானிக்கப்படும் மஸ்ஜிதுகளும் அழிக்கப்பட்டு போயிருக்கும்; அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கிறானோ, அவனுக்கு திடனாக அல்லாஹ்வும் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கோனும், (யாவரையும்) மிகைத்தோனுமாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 22:40)

இந்த அனுமதி மக்காவில் இருக்கும் எதிரிகளுடன் போர் செய்வதற்கு மட்டும் வழங்கப்பட்டது.

மக்கா எதிரிகள் பல நிலைகளிலும் முஹம்மது நபி (ஸல்) க்கு தொல்லைக் கொடுத்தார்கள். அவர்களை சமாளிக்க முஹம்மது நபி (ஸல்)பல போர்களில் ஈடுபட்டார்.

1. பதுருப் போர்,

2. உஹத் யுத்தம்,

3. கைபர் போர்,

4. அகழ்ப்போர்,

5. தபூக் போர்,

6 ஹுனைன் போர்

உள்ளிட்ட பல போர்களில் முஹம்மது நபி (ஸல்) ஈடுபட்டார்கள்.

நடந்த போர்களில் வெற்றியும், தோல்வியும் (படிப்பினைகளுபன்) அல்லாஹ்வின் நாட்டப்படி நடந்தேறியது.

வெற்றி பெற்ற போரில் பிணைய கைதிகளில் படித்தவர்கள் எவரேனும் இருந்தால் மதினாவில் கல்வி இல்லாதவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்தால் அவர்களுக்கு விடுதலை என்று அறிவித்தார்கள்.

அதுவரை புழக்கத்தில் இல்லாத போர் தர்மங்கள் (விதிமுறைகள்) இறுதி தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மூலமாக அல்லாஹ் கட்டளையாக அருளினான்.

11. போற்றுதலுக்குரிய இஸ்லாமிய போரும் அதன் ஒழுக்கமும்.

ஒரே இறைவனை ஏற்று அவனின் கட்டளைப் பிரகாரம் வாழ்வியலை அமைத்து கொள்ளும் மக்களிடமும், அவர்களைச் சார்ந்த அரசாங்கத்திடமும், மற்றவர்களுக்கு தொல்லையோ, அநீதியோ இழைக்காத நிலையில் தீங்கிழைக்கும் நோக்கில் தாக்கவோ அல்லது போர் புரியவோ மற்றவர்கள்/ எதிரணியினர் முற்பட்டால் தன்னை/தங்களை தற்காத்துக் கொள்ள எதிர்த்து போரிட **அல்லாஹ் அனுமதிக்கிறான்.**

ஆனாலும் நீதியாளனான **அல்லாஹ் சில வரம்புகளை** தெளிவாக இறைத்தூதர் மூலம் விதித்திருக்கிறான்.

அவற்றை சிலவற்றை இங்கு காண்பதன் மூலம் **அல்லாஹ்வின் கட்டளையும், இறுதித் தூதரின் வழிமுறையும்** எவ்வளவு துல்லியமாக வகுக்கபட்டிருக்கிறது என்பது தெரிந்து கொள்ள முடிகிறது.

"பலவீனர்களும் நோயாளிகளும் போருக்குச் செலவிடும் பொருளில்லாதவர்களும் போரில் ஈடுபடாதிருப்பது குற்றமல்ல" என்று கூறுகிறது (அல்குர்ஆன் 9:91)

"குருடன், நொண்டி, நோயாளிகள் போரில் கலந்து கொள்ளாதது குற்றமல்ல" (அல்குர்ஆன் 48-17)

"போரிடுபவர்கள் போர் புரியாது விலகினால் நீங்கள் அவர்களோடு போரிட வேண்டாம்" (குர்ஆன் 2:192)

"கலகக் காரர்கள் கலகத்திலிருந்து விலகிவிடின் அவர்களுக்கு மன்னிப்பு உண்டு. அநியாயம் செய்பவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் மீது அத்துமீறல் அறவே கூடாது" (அல்குர்ஆன் 4:86)

(நபியே!) இணைவைப்பவர்களில் யாரேனும் உம்மிடம் புகலிடம் தேடி வந்தால், அல்லாஹ்வுடைய வசனங்களை அவர் செவியேற்கும் வரையில் அவருக்கு அபயமளிப்பீராக; அதன் பின் அவரை அவருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் வேறு இடத்திற்கு (பத்திரமாக) அனுப்புவீராக - ஏனென்றால் அவர்கள் நிச்சயமாக அறியாத சமூகத்தினராக இருக்கிறார்கள். (அல்குர்ஆன் 9:6)

இஸ்லாமிய அரசுக்கான போர் சட்டங்கள்:

1. மரத்தை வெட்டாதீரகள்.
2. பெண்களைக் கொலை செய்யாதீர்கள்.
3. குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள்.
4. நோயாளிகளைக் கொலை செய்யாதீர்கள்.
5. வழிபாட்டுத் தலங்களைச் சேதப்படுத்தாதீர்கள்.
6. மதகுருமார்களைக் கொலை செய்யாதீர்கள்.
7. இறந்த உடல்களைச் சேதப்படுத்தாதீரகள்.
8. கட்டிடங்களைச் சேதப்படுத்தாதீர்கள்.
9. விலங்குகளை உணவுக்காகவன்றி கொலை செயயாதீர்கள்.
10. நீர் நிலைகளை அசுத்தப் படுத்தாதீர்கள்.

11. வீடுகள் மற்றும் கட்டடங்களை நெருப்பிலிடாதீர்கள்.

12. சரணடைபவர்களைக் கொலை செய்யாதீர்கள்.

13. பிடிபட்டவர்களுடன் அழகாக நடந்து கொள்ளுங்கள், மேலும் அவர்களுக்கு உணவளியுங்கள்.

14. புறமுதுகு காட்டி ஓடுபவரகளைக் கொலை செய்யாதீர்கள்.

15. இஸ்லாத்தை (ஓரிறைக் கொள்கையை) ஏற்கத் சொல்லி வற்புறுத்தாதீர்கள்.



11. மக்காவில் இருக்கும் இணை வைப்பவர்களுடன் சமாதான ஒப்பந்தமும், உலக ஆட்சியாளர்களை இஸ்லாத்தின் (ஓரிறைக் கொள்கையின்) பக்கம் அழைத்தல், மக்கா வெற்றியும்.

நபி (ஸல்) மதீனாவில் உள்ள முஸ்லிம்களையும் சுற்று வட்டார முஸ்லிம் கிராமவாசிகளையும் தன்னுடன் மக்காவில் உம்ரா (முதன் முதலில் இறைவனை தொழுவதற்காக எழுப்பப்பட்ட ஆலயம் - காபாவை தரிசிப்பதற்காக வருகை புரிவது) செய்ய புறப்படுமாறு கூறினார்கள். நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் மக்காவை நோக்கி புறப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்களின் வருகையை கேள்விப்பட்ட மக்காவில் உள்ள இணை வைப்பவர்கள் அவசர ஆலோசனை சபையை கூட்டி எப்படியாவது முஸ்லிம்களை மக்காவிற்குள் வரவிடாமல் தடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தனர். அவர்களிடம் பல தூதர்களை அனுப்பினர்.

நாங்கள் எவரிடமும் சண்டை செய்வதற்காக இங்கு வரவில்லை. நாங்கள் உம்மரா செய்வதற்காக வந்திருக்கிறோம் என நபி (ஸல்(அவர்கள் தூதர்களிடம் கூறினார்கள். நிலைமை மோசமாவதை அறிந்து கொண்ட மக்காவில் உள்ள இணை வைப்பவர்கள் **சமாதான ஒப்பந்தத்தை** ஏற்படுத்திக் கொள்வதற்காக சுஹைல் இப்னு அம்ர் என்பவரை நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தனர். மேலும் அந்த ஒரு ஒப்பந்தத்தில் கீழ்காணும் முக்கிய அம்சங்களை இடம்பெறச் செய்தனர்.

1) நபி அவர்கள் இந்த ஆண்டு திரும்பிச் செல்ல வேண்டும். மக்காவிற்குள் நுழையக்கூடாது. அடுத்த வருடம் முஸ்லிம்கள் உம்ராவிற்கு வந்து மக்காவில் மூன்று நாட்கள் தங்கிக் கொள்ளலாம் சாதாரணமாக ஒரு பயணி தன்னுடன் வைத்திருக்கும் ஆயுதங்களை எடுத்து வரலாம் ஆனால் அவற்றை உறைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எவ்வகையிலும் எவ்வித தொந்தரவும் கொடுக்கப்பட மாட்டாது.

2) பத்து ஆண்டுகளுக்கு இரு தரப்பும் போர் நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாது. அக்காலங்களில் அனைவரும் அச்சமற்று இருப்பார்கள். யாரும் எவருக்கும் எவ்வித தீங்கும் செய்யக்கூடாது.

3) யார் ஒருவர் முஹம்மத் உடைய ஒப்பந்தத்திலும் உடன்படிக்கையிலும் சேர்ந்து கொள்ள விரும்புகிறாரோ அவர் அதில் சேர்ந்து கொள்ளலாம். மக்காவில் உள்ள இணை வைப்பவர்களின் ஒப்பந்தத்திலும் உடன்படிக்கையிலும் சேர்ந்து கொள்ள விரும்புகிறவர் அதில் சேர்ந்து கொள்ளலாம். எந்த ஒரு கிளையினரும் இந்த இரு வகுப்பாரில் ஒருவருடன் சேர்ந்து கொள்கிறாரோ அவர் அந்த வகுப்பாரையே சேர்ந்தவர் ஆவார். அதற்குப்பின் அந்தக் கிளையினருடன் யாராவது அத்துமீறி நடந்து கொண்டால் அது அந்த வகுப்பினர் அனைவர் மீதும் அத்துமீறியதாகும்.

4) மக்காவில் உள்ள இணை வைப்பவர்களில் யாராவது தன் பாதுகாவலரான நெருங்கிய உறவினரின் அனுமதியின்றி தப்பித்து முஹம்மதிடம் வந்து சேர்ந்தால் முஹம்மது அவரை மக்காவிற்கு திருப்பி அனுப்பி விட வேண்டும் ஆனால் முஹம்மதிடம் உள்ளவர்களில் யாராவது தப்பித்து மக்காவிற்கு வந்துவிட்டால் அவர் முஹம்மதிடம் திருப்பி அனுப்பப்பட மாட்டார்.

இதற்க்கு ஹுதைபியா சமாதான உடன்படிக்கை என்று பெயர்.

இந்த உடன்படிக்கை முஸ்லிம்களுக்கு மகத்தான வெற்றி தான் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். மக்காவில் உள்ள இணை வைப்பவர்கள் சமாதான ஒப்பந்தத்திற்கு பணிந்து

வந்ததே முஸ்லிம்களின் ஆற்றலை அவர்கள் ஏற்றுக் கொண்டதற்கும் இனி முஸ்லிம்களை எதிர்க்க மக்காவில் உள்ளவர்களிடம் ஆற்றல் இல்லை என்பதற்கும் தெளிவான ஆதாரமாகிவிட்டது.

அழைப்பு பணியில் ஆர்வம் - அரசர்கள், ஆளுநர்களுக்கு கடிதங்கள் எழுதுதல்:

தமது 53வது வயதில் மக்காவில் இருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பத்து வருடங்களாக கிட்டத்தட்ட 63 வயது வரை மதினாவில் வசித்தார்கள்.

இந்த பத்து வருட மதீனா வாழ்க்கையில் மீதமுள்ள 32 (மொத்தம் குரானில் 114 அத்தியாயங்கள்) அத்தியாயங்களும் கொஞ்சம் கொஞ்சமாக இறக்கி அருளப்பட்டது.

இக்காலகட்டங்களில் ஓர் இறைக் கொள்கையை கடிதங்களை எழுதி தூதுவர்கள் மூலம் பல்வேறு நாடுகளில் இருக்கும் மன்னர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் தமது தூது செய்தியை பரப்பினார்கள்.

இஸ்லாமிய அழைப்புப் பணி அதாவது ஓர் இறைக் கொள்கையின் பக்கம் மக்களை, ஆட்சியாளர்களை அழைக்கும் பணிதான் அனைத்திலும் முக்கியமான தூதுத்துவத்தின் அடிப்படை நோக்கமாகும். முஸ்லிம்கள் இதுவரை அனுபவித்த துன்பங்கள், சோதனைகள், சந்தித்த போர்கள், கொடுமைகள், ஆகிய அனைத்திலும் ஓரிறைக் கொள்கையின் பக்கம் அழைக்கும் பணி ஒன்று மட்டுமே அடிப்படை நோக்கமாக இருந்தது.

அப்படி எழுதப்பட்ட அன்றைய ஆட்சியாளர்கள் சிலரை பார்ப்போம்.

1. **ஹபஷா** (இன்றைய எத்தியோபியா, எரித்திரியா நாடுகள்) மன்னர் நஜ்ஜாஷி.

2 **மிஸ்ரு** (இன்றைய எகிப்து) நாட்டு மன்னர் முகவ்கிஸ்/ ஜ் ரை ஜ்.

3 **பாரசீக** (இன்றைய ஈரான், ஈராக்) மன்னர் கிஸ்ரா.

4. **ரோம்** (இன்றைய ஐரோப்பிய நகரங்களின் ஏறக்குறைய தலைமை) நாட்டு மன்னர் ஹிர்கல்.

5. **பஹ்ரைன்** நாட்டு ஆளுநர் அல்முன்திர் இப்னு ஸாவி.

6 **யமாமா** நாட்டு அரசர் ஹவ்தா இப்னு அலி

7. **ஷாம்** (இன்றைய சிரியா, ஜோர்டான், லெபனான், பாலஸ்தீன்) நாட்டு மன்னர் ஹாரிஸ் அல்கஸ்ஸானி.

8. **ஓமன்** நாட்டு மன்னர் ஜைஃபர்.

ஆகியோருக்கு இஸ்லாத்தின் பக்கம் ஓரிறைக் கொள்கையின் பக்கம் அழைப்பு கொடுத்து நபி (ஸல்) அவர்கள் கடிதம் எழுதினார்கள். அவர்களின் சிலர் ஆமோதித்தார்கள். சிலர் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

மக்கா வெற்றி:

மக்காவில் உள்ள இணை வைப்பவர்கள் ஹ் ைதைபியாவில் செய்த ஒப்பந்தத்தை முறிக்கும் செயல்களை தொடர்ந்து செய்து வந்தனர். அவர்களின் இச்செயல் எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத அளவிற்கு இருந்தது தங்களின் இத்தீய செயல்களுக்குப் பின் அதன் விபரீதத்தை அறிந்து கொண்ட மக்கா இணை வைப்பவர்கள் உடனடியாக அவசர ஆலோசனை சபையை கூட்டினர்.

ஹிஜ்ரி 8ல் (அதாவது மக்காவிலிருந்து மதீனாவிற்க்கு வந்து 8 ஆண்டுகளுக்கு பிறகு) ரமலான் மாதம் பிறை 10ல் நபி (ஸல்) அவர்கள் பத்தாயிரம் தோழர்களுடன் மக்காவில் உள்ள இணைவைப்புகளுடன் போர் புரிய புறப்பட்டார்கள். இதை அறிந்த மக்காவாசிகள் செய்வதறியாது திகைத்தனர் நடுங்கினர்.

மக்காவில் பள்ளிக்குள் நுழைந்து ஹஜ்ருல் அஸ்வத்தை நெருங்கி சென்று அதை தங்கள் கையால் தொட்டு முத்தமிட்டு காஃபாவை தவாப் செய்தார்கள். தங்கள் கையில் இருந்த வில்லால் காஃபாவை சுற்றி இருந்த 360 சிலைகளை.

சத்தியம் வந்தது; அசத்தியம் மறைந்தது,
நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்.
(அல்குர்ஆன் 17:81)

என்ற இறை வசனத்தை ஓதியவர்களாக குத்தி கீழே தள்ளினார்கள். சிலைகள் எல்லாம் முகம் குப்புற கீழே விழுந்தன. நபி (ஸல்) அவர்கள் அவர்கள் வாகனத்தின் மீது இருந்து கொண்டு காஃபாவை தவாப் செய்தார்கள்.

மக்காவில் நுழைந்த நபி (ஸல்) அவர்கள் அவர்களோ நம்மிடம் அதனால் வரை போரிட்டு வந்த மக்காவாசிகள் அனைவரையும் பார்த்து பின்வருமாறு உரை நிகழ்த்தினார்கள்.

வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு எவ்வித துணையும் இல்லை. அவன் தன் வாக்கை நிலை நாட்டினான். தன் அடியாருக்கு உதவி செய்தான். அவனே ராணுவங்கள் அனைத்தையும் தனியாக தோற்கடித்தான். இதுவரை நடைமுறையில் இருந்து வந்த அல்லாஹ்வின் இந்த இல்லத்தை பராமரிப்பது, ஹாஜிகளுக்கு தண்ணீர் புகட்டுவது ஆகிய இரண்டைத் தவிர வேற அனைத்து சிறப்புகளையும், மற்ற பொருள் அல்லது உயிர் சம்பந்தப்பட்ட அனைத்து சடங்குகளையும், சம்பிரதாயங்களையும், என் இவ்விரண்டு கால்களுக்கு கீழ் புதைத்து விட்டேன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக
நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்து

படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களை கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால் உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்க்கில்லை) எனினும், உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கிறாரோ, அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிகக் கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் (அனைத்தையும்) நன்கு அறிந்தவனாகவும் நன்கு தெரிந்தவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 49:13)

மேற்கூறிய வசனத்தை ஓதி காட்டிய பின்பு இணை வைப்பவர்களே! நான் உங்களிடம் எவ்விதம் நடந்து கொள்வேன் என்று கருதுகிறீர்கள்? என நபி ஸல் கேட்க, நல்ல முறையில் நடந்து கொள்வீர்கள். நீங்கள் எங்களுக்கு சிறந்த சகோதரர்களாகவும், எங்கள் சிறந்த சகோதரரின் மகனாவும் இருக்கிறீர்கள் என பதில் கூறினர். நபி ஸல் அவர்கள் நான் உங்களுக்கு யூசுப் நபி தனது சகோதரருக்கு கூறியது போன்று தான் கூறுவேன் உங்களை எவ்விதத்திலும் பழி வாங்கப்படமாட்டாது. நீங்கள் மன்னிக்கப்பட்டவர்கள். நீங்கள் செல்லலாம். என்று கூறினார்கள்.

இந்த வெற்றியில் உள்ளங்களும் வென்றெடுக்கப்பட்டன. இப்போது **இஸ்லாமிய ஓரிறைக் கொள்கை** அரபு தேசம் முழுவதும் பரவியது.



13. நபியவர்களின் பண்புகளும நற்குணங்களும்

உங்களில் என்னை தனியே உயர்த்திக் காட்ட விரும்பவில்லை!

ஒரு பயணத்தின் போது ஆடு ஒன்றை அறுத்து சமைக்கும்படி கூறினார்கள். ஒருவர் நான் அறுக்கிறேன் என்றார், ஒருவர் நான் உரிக்கிறேன் என்றார், ஒருவர் நான் சமைக்கிறேன் என்றார், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அதற்காக நான் விறகுகளைச் சேர்த்து வருவேன் என்றார்கள். அதற்கு தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே! உங்களுக்கு ஏன் சிரமம்? நாங்கள் இதைச் செய்து கொள்கிறோம் என்றனர். அப்போது நபி (ஸல்) உங்களால் செய்ய முடியும் என்பது எனக்கு நன்றாக தெரியும். இருந்தாலும், உங்களில் என்னை தனியே உயர்த்திக் காட்ட விரும்பவில்லை! ஏனெனில், ஒருவர் தன் தோழர்களில் தனியாக வேறுபடுத்திக் காட்டுவதை 'அல்லாஹ்' வெறுக்கிறான் என்று கூறி விறகுகளை சேகரிக்கச் சென்றார்கள். (குலாஸத்துஸ் ஸியர்)

எப்பொழுதும் மலர்ந்த முகமும் இளகிய குணமும் நளினமும் பெற்று இருப்பார்கள். கடுகடுப்பான குணம் கொண்டவரோ, கூச்சலிடுபவரோ, அருவருப்பாக பேசுபவரோ, அதற்றுபவரோ, அதிகம் புகழ்பவரோ அல்ல, விருப்பமற்றதை கண்டு கொள்ள மாட்டார்கள், நிராசையாகவும் மாட்டார்கள்.

இரக்க குணம்:

நபிகள் நாயகம் அவர்களின் உள்ளத்தில் இயற்கையாகவே இரக்க குணம் குடி கொண்டிருந்தது. சிறியவர்கள், பெரியவர்கள், ஏழைகள், பிற ஜீவராசிகள் இப்படி எல்லோர் மீதும் அவர்கள் இரக்கத்தையும் அன்பையும் செலுத்தி வந்தார்கள்.

முஹம்மது நபி அவர்கள் சிறுவர்களை கடந்து சென்றால் அவர்களுக்கு சலாம் கூறுவார்கள் (அவர்களுக்கு இறையருள்

கிடைக்க வேண்டும் என கூறுவார்கள்) புகாரி-6347.

சிறுவர்கள் தானே என்று சென்று விடாமல் அச்சிறுவர்களுக்கு அல்லாஹ்வின் அருள் கிடைக்க வேண்டுமென அவர்கள் கூறியதில் இருந்து சிறுவர்களின் மீது அவர்களுக்கு இருந்த அன்பையும் இரக்கத்தையும் நாம் விளங்கலாம்.

ஒரு முறை மக்களுக்கு தொழுவித்த போது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுருக்கமாக தொழுது முடித்து விட்டார்கள் இதைப் பற்றி குறிப்பிடும்போது ஒரு குழந்தையின் அழுகுரலே எனது தொழுகையை சுருங்கச் செய்து விட்டது ஏனெனில் குழந்தையின் அழுகுரலால் தொழும் வரிசையில் நிற்கும் தாயின் உள்ளம் கஷ்டப்படுமே என்று எண்ணினேன் என அவர்கள் குறிப்பிட்டார்கள். புகாரி-707, முஸ்லிம் 809.

ஒருமுறை அவர்கள் முதுகும் வயிறும் ஒன்றோடு ஒன்றாக ஒட்டி விட்ட ஒட்டகத்தைக் கடந்து சென்றார்கள் அப்போது வாயில்லா இந்த விலங்கினத்தின் விஷயத்தில் அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். இதற்கு அழகிய முறையில் இரையூட்டுங்கள். என்று கூறினார்கள். (நூல் அபுதாவூது)

மூன்று குணங்களை விட்டு தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள்:

1 முகஸ்துதி,

2.அதிகம் பேசுவது,

3. தேவையற்றவற்றில் ஈடுபடுவது.

மக்களைப் பற்றி **மூன்று காரியங்களை** தவிர்த்துக் கொண்டார்கள் :

1.பிறரை பழிக்க மாட்டார்கள்,

2. பிறரை குறை கூற மாட்டார்கள்,

3. பிறரின் குறையை தேட மாட்டார்கள்.

நன்மையானவற்றைத் தவிர வேறு எதுவும் பேச மாட்டார்கள். அவர்கள் பேசினால் சபையோர்கள் அமைதி காப்பார்கள். தங்கள் தலைமீது பறவை அமர்ந்திருப்பது போல் அசையாமல் இருப்பார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அமைதியானால் தோழர்கள் பேசுவார்கள். நபியின் முன் பேசும் போது தோழர்கள் போட்டியிட்டு கொள்ள மாட்டார்கள். யாராவது பேசத் தொடங்கினால் அவர் முடிக்கும் வரை அவருக்காக அமைதி காப்பார்கள். முதலில் பேசியவரின் பேச்சை ஏற்பார்கள். மக்கள் சிரிப்பதை கண்டு தானும் சிரிப்பார்கள். மக்கள் ஆச்சரியப்படுபவற்றை கண்டு தானும் ஆச்சரியப்படுவார்கள். புதியவரின் முரட்டுப்பேச்சை சகித்துக் கொள்வார்கள். தேவையுடைய வரை நீங்கள் பார்த்தால் அவர்களின் தேவையை நிறைவேற்றுங்கள் என்பார்கள். உதவி உபகாரம் பெற்றவர் நன்றி கூறினால் மட்டும் ஏற்றுக் கொள்வார்கள். (ஷமாயிலுத் திர்மிதி, அஷ்ஷிஃபா)

நபி (ஸல்) அவர்களுடைய மகன் இறந்த அன்று சூரிய கிரகணம் ஏற்பட்டது மக்கள் இவர் மீது உள்ள அன்பாலும் நம்பிக்கையாலும் இறைத்தூதரின் மகன் இறந்ததால் தான் சூரிய கிரகணம் ஏற்பட்டது என்று பேசத் தொடங்கி விட்டார்கள். இதை உடனே மறுத்து **"என் மகனின் இறப்புக்கும் சூரிய கிரகணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை"** என்று மக்களுக்கு தெளிவு படுத்தி **மூடநம்பிக்கை கொள்ள வேண்டாம்** என்று அறிவுறுத்தினார்கள். **"எனக்கு இறைச்செய்தி (வஹி) வருகிறது என்னும் ஒரு விஷயத்தைத் தவிர நானும் உங்களைப் போன்ற சாதாரண மனிதன் தான்"** என்று கூறி எளிமையாக வாழ்ந்தார்கள் இது போன்ற நிகழ்வுகளை தமக்கு சாதகமாக்கி தம்மை சக்தி வாய்ந்த மனிதர் என்று அவர்கள் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



14. இறுதி இறைத்தூதர் முஹம்மது இறுதி பேருரை ஆற்றும் முன்பு...(இடமும், காலச் சூழ்நிலையும்)

இதற்கு முன் என்றுமே இருந்திராத அளவிற்கு மாபெரும் கூட்டத்தால் அன்று சங்கைமிகு மக்காவின் புனித பள்ளிவாசல் நிரம்பி வழிந்தது, அங்கு கூடியிருந்தோரின் உள்ளச்சமும் வணக்க வழிபாடுகளும் அவர்களின் ஆன்மிக உணர்வுகள் முழுமை அடைந்திருந்ததை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

அதுதான் **ஹிஜ்ரி 10** ஆம் ஆண்டு **"ஹஜ் கடமையை"** நிறைவேற்ற கூடியிருந்த மாபெரும் கூட்டத்தின் எதார்த்த நிலையாகும். அரபுலகம் முழுவதிலுமிருந்து சுமார் **ஒரு இலட்சத்து இருபதாயிரத்திற்கும் அதிகமானவர்கள்** அங்கே குழுமியிருந்தார்கள். அதுவும் ஒரு மகத்தான வணக்கத்தை, மகத்தான இறைத்தூதர் முஹம்மதுஅவர்களுடன் சேர்ந்து நிறைவேற்றுகிற மன மகிழ்ச்சியில் திளைத்திருந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மது அவர்கள் அங்கு வந்திருந்த அனைவரையும் **துல் ஹஜ் பிறை எட்டின் நடுப்பகலுக்குப் பிறகு மக்காவிலிருந்து "மினா'விற்கு** அழைத்துச் சென்றார்கள். அங்கு ளுஹர், அஸர், மக்ரிப், இஷா, ஸுப்ஹு ஆகிய தொழுகைகளை முடித்துவிட்டு **சூரிய உதயத்திற்குப் பின், தோழர்களுடன் அரஃபா** நோக்கிப் புறப்பட்டார்கள். அங்கு நமிரா பள்ளத்தாக்கில் நபியவர்களுக்காக கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் சூரியன் உச்சி பொழுதைக் கடக்கும் வரை தங்கி இருந்தார்கள். அதன் பிறகு **தமது "கஸ்வா' ஒட்டகத்தைத்** தயார் படுத்தக் கூறி, அதில் பயணித்து, **"பத்னுல்வாதி"** எனும் பகுதிக்கு வந்தார்கள். அமைதி காத்த நிலையில் அந்த மக்கள் நபி அவர்களைப் பார்த்தபடி நிற்க, அதே இடத்தில் தமது ஒட்டகத்தின் மீதமர்ந்தபடி **நபியவர்கள் ஒரு சொற்பொழிவு** ஆற்றினார்கள்

15. "நபியவர்களின் இறுதிப் பேருரை"

நபி (ஸல்) அவர்கள் அப்போது ஆற்றிய அந்த உரையே "நபியவர்களின் இறுதிப் பேருரை" என்பதாக இன்று அறியப்படுகிறது.

கூட்டம் பிரமாண்டமாக இருந்ததால், நபி அவர்களின் சொற்பொழிவு அனைவரின் செவிகளுக்கும் சென்றடைவது சாத்தியமில்லை என்ற நிலை உருவானது. எனவே, அங்கிருந்தோரிலேயே மிக உரத்த குரல் கொண்டிருந்த **ரபீ இப்னு உமய்யா இப்னு கலஃபை** அழைத்து, தமது பேச்சை எல்லோரும் செவியுறும் விதமாக ஒவ்வொரு வாக்கியமாய் திரும்பச் சொல்லுமாறு பணித்தார்கள்.

(அல் பிதாயா இப்னு கஸீர் 5/189)

தொடக்க துதி மொழிகள்:

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவனையே நாம் புகழ்கிறோம்; அவனிடமே நாம் உதவி தேடுகிறோம். நம்முடைய மன இச்சைகளின் கெடுதிகளை விட்டும், நம்முடைய செயல்களின் தீமைகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம். யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவானோ, அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. யாரை அல்லாஹ் வழிகேட்டில் விட்டுவிடுவானோ, அவரை நேர்வழியில் செலுத்துபவர் யாரும் இல்லை. இன்னும், நான் சாட்சி சொல்கிறேன்: "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை. அவன் தனித்தவன்; அவனுக்குக் கூட்டாளி யாரும் இல்லை.' மேலும், நான் சாட்சி சொல்கிறேன்: "நிச்சயமாக முஹம்மது, அவனுடைய அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார். (ஸுனன் இப்னு மாஜா 1892,1893)

பிரிவின் முன்னறிவிப்பு:

ஓ...மக்களே! என் பேச்சை கவனமாகக் கேளுங்கள்! இந்த ஆண்டிற்குப் பிறகு மீண்டும் இந்த இடத்தில் சந்திப்பேனா என்பது

எனக்குத் தெரியாது. (தாரீக் இப்னு கல்தூன் 2/58, இப்னு ஹிஷாம் 2/603, அர்ரஹீக் அல்மக்தூம் 461)

பிறப்பால் உயர்வு தாழ்வு காட்டாதீர்!

மக்களே! உங்களது இறைவன் ஒருவனே; (உங்களது தந்தையும் ஒருவரே!) அறிந்து கொள்ளுங்கள்: எந்த ஓர் அரபிக்கும் ஓர் அரபி அல்லாதவரை விடவோ, எந்த ஓர் அரபி அல்லாதவருக்கும் ஓர் அரபியை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. எந்த ஒரு வெள்ளையருக்கும் ஒரு கருப்பரை விடவோ, எந்த கருப்பருக்கும் ஒரு வெள்ளையரை விடவோ எந்த மேன்மையும் சிறப்பும் இல்லை. இறையச்சம் மட்டுமே ஒருவரின் மேன்மையை நிர்ணயிக்கும். நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உங்களில் மிகச் சிறந்தவர் உங்களில் அதிகம் இறை அச்சம் உள்ளவர்தான்.

(அஸ்ஸில்ஸலதுல் ஸஹீஹா2700, அத்தர்கீப் வத்தர்ஹீப், அல்பைஹகீ, தஹாவி)

தலைமைக்குக் கீழ்ப்படிவீர்!

ஒ...மக்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள் கருப்பு நிற (அபிசீனிய) அடிமை ஒருவர் உங்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டாலும் அவர் அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு உங்களை வழி நடத்தி அதை உங்களுக்கிடையில் நிலைநிறுத்தும் காலமெல்லாம் (அவரது சொல்லைக்) கேட்டு நடங்கள்; (அவருக்குக்) கீழ்ப்படியுங்கள்!

(ஸுனன் நஸாயி 4192, ஜாமிவுத் திர்மிதி1706)

பிறர் உடமையைப் பேணுவீர்!

ஒ... மக்களே! இந்த (துல்ஹஜ்) மாதமும், இந்த (துல்ஹஜ் 9ம்) நாளும், இந்த (மக்கா) நகரமும் எவ்வளவு புனிதமானவையோ, அப்படியே உயிர்களும், உங்கள் உடமைகளும் உங்கள்

மானம் மரியாதைகளும் உங்களுக்குப் புனிதமானவை. அராஜகம் செய்யாதீர்கள்! அறிந்து கொள்ளுங்கள்! எனக்குப் பிறகு ஒருவர் மற்றவரின் கழுத்தை வெட்டி மாய்த்துக் கொள்ளும் வழிகெட்டவர்களாய் இறை நிராகரிப்பாளர்களாய் மாறி விடாதீர்கள். (ஸஹீஹுல் புகாரி 4403).

உங்களது இறைவனை நீங்கள் சந்திக்கும் வரை (இப்படியே வாழுங்கள்!)

நீங்கள் அனைவரும் தவறாமல் அல்லாஹ்வின் முன்னிலையில் ஆஜராகப் போகிறீர்கள்! அப்போது அல்லாஹ் உங்களது செயல்களைப் பற்றி விசாரிப்பான். நான் மார்க்கத்தை உங்களுக்கு எடுத்துரைத்து விட்டேன். உங்களில் எவராவது மற்றவருடைய பொருளின் மீது பொறுப்பேற்றிருந்தால், அதை அவர் உரிய முறையில் அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்து விடட்டும்.

(ஸஹீஹ் முஸ்லிம் 2334, ஸஹீஹுல் புகாரி 67, 105, 1741, 1742)

பணியாளர்களைப் பேணுவீர்!

ஒ..மக்களே! முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள். உங்கள் அடிமைகள் விஷயத்தில் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ளுங்கள்! அவர்களை நன்றாகப் பராமரியுங்கள்! நீங்கள் உண்பதையே அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள்; நீங்கள் உடுத்துவதையே அவர்களுக்கும் உடுத்தச் செய்யுங்கள்!

(தபகாத் இப்னு ஸஅது, முஹம்மது அந்நபிய்யுல் காதிம் மாஜித் அலீ கான்)

மறுமைக்கு அஞ்சுவீர்!

ஓ... குரைஷிகளே! நாளை மறுமைக்கான தயாரிப்புடன் மக்கள் வரும்போது நீங்கள் உங்கள் பிடரிகளின் மீது உலகச் சுமைகளைச் சுமந்துகொண்டு வந்து விடாதீர்கள். அப்போது அல்லாஹ்வின் புறத்திலிருந்து நான் எந்த ஒரு விஷயத்திலும் உங்களுக்குப் பலன் அளித்திட முடியாது. (முஜ்மவுஸ் ஸவாயிது 272/3)

அநீதம் அழிப்பீர்!

அறியாமைக்கால அனைத்து விவகாரங்களும் என் பாதங்களுக்குக் கீழ் புதைப்பப்பட்டு விட்டன. மேலும், இன்று வரையிலான எல்லா வட்டிக் கணக்குகளையும் ரத்துச் செய்து விட்டேன். எனினும், உங்களது மூலதனம் உங்களுக்கே உரியது. வட்டியை அல்லாஹ் தடைசெய்து விட்டான். எனவே, முதலில் (என் குடும்பத்தைச் சேர்ந்த) அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிபின் வட்டியைச் செல்லாததாக ஆக்குகிறேன். அறியாமைக்கால இரத்தப் பழிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டு விட்டன. இனி, பழைய கொலைக்குப் பழிவாங்கும் உரிமை எவருக்கும் இல்லை. இதில் முதலாவதாக என் குடும்பத்தைச் சேர்ந்த ரபீஆ இப்னு அல்ஹாரிஸ் இப்னு அப்துல் முத்தலிப் கொல்லப்பட்டதற்கான பழிவாங்கலை ரத்துச் செய்கிறேன். அறியாமைக் கால கொலை குற்றத்தில் இதை நான் முதலாவதாக தள்ளுபடி செய்கிறேன்.

(ஸஹீஹ் முஸ்லிம் 2334, இப்னு மாஜா 3074)

முறைதவறி நடக்காதீர்!

அறிந்துகொள்ளுங்கள்! குழந்தை விரிப்புக்கே சொந்தமானது. (அனுமதிக்கப்பட்ட திருமண உறவுடன் இருக்கும் கணவனுக்கே குழந்தை உரியதாகும்) மணமுடித்துக் கொண்ட பிறகும் விபசாரம் செய்பவர் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். எவர் தம் தந்தை அல்லாதவரை தம்முடைய தந்தையாக அழைக்கிறாரோ, எவர் தம் உரிமையாளர் அல்லாதவருடன் தம்மை இணைத்துக் கொள்கிறாரோ, அவர்கள் மீது அல்லாஹ்வுடைய, வானவர்களுடைய இன்னும், மக்கள் அனைவருடைய சாபமும் உண்டாகட்டும்! அவர்களின் கடமையான உபரியான எந்த வணக்கமும் ஏற்றுக் கொள்ளப்படாது.

(இப்னு மாஜா 2712, ஸஹீஹுல் ஜாமிஇ1789).

உரிமைகளை மீறாதீர்!

ஒரு பெண் தமது கணவரின் வீட்டிலிருந்து அவரது அனுமதியின்றி எதையும் செலவு செய்யக்கூடாது. அப்போது, "உணவையுமா?' என்று கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள், "ஆம்! அதுதான் நமது செல்வங்களில் மிகச் சிறந்தது' என்றார்கள்.

(ஸஹீஹுல் ஜாமிஇ1789, ஸுனன் அபூ தாவூத் 3565)

ஓ...மக்களே! ஒவ்வொருவருக்கும் சொத்தில் அவரவரின் உரிமைகளை அல்லாஹ் வழங்கி இருக்கின்றான். இனி, எவரும் தமது எந்த வாரிசுக்கும் உயில் எழுதக் கூடாது.

(நஸாயி 3642, ஸுனன் அபூதாவூத் 2870, 3565, தபகாத் இப்னு ஸஅது)

இரவலாக வாங்கப்பட்ட பொருட்கள் உரியவரிடமே ஒப்படைக்கப் படவேண்டும்;

பாலைக் கொண்டு பயன்பெற கொடுப்பட்ட கால்நடைகள் (அவற்றின் பயன்பாடு தீர்ந்தவுடன்) அவற்றின் உரிமையாளரிடமே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்; கடன்கள் நிறைவேற்றப்பட வேண்டும்; இழப்பீடுகளை நிறைவேற்ற தலைவனே பொறுப்பாளன்.

(ஸுனன் அபூதாவூத் 3565, ஜாமிவுத் திர்மிதி 2120, 2121, ஸுனன் இப்னு மாஜா தபகாத் இப்னு ஸஅது, தாரீக் இப்னு இஸ்ஹாக்)

பெண்களை மதிப்பீர்!

கவனியுங்கள்! பெண்கள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்; அவர்களுக்கு நன்மையே நாடுங்கள்; அவர்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். அல்லாஹ்வுடைய அமானிதமாக அவர்களை நீங்கள் பெற்றுள்ளீர்கள்! எப்படி உங்கள் மனைவியர் மீது உங்களுக்கு உரிமைகள் இருக்கின்றனவோ,

அதே போல் உங்கள் மனைவியருக்கும் உங்கள் மீது உரிமைகள் இருக்கின்றன. அவர்கள் உங்களுக்குச் சிறந்த முறையில் பணிவிடை ஆற்றட்டும்! அவர்களுக்குரிய கடமை என்னவென்றால், நீங்கள் எவரை விரும்ப மாட்டீர்களோ, அவரை அவர்கள் வீட்டுக்குள் அனுமதிக்காமல் இருக்கட்டும்; இன்னும், மானக்கேடான செயலைச் செய்யாமல் இருக்கட்டும்! அவர்கள் குற்றம் புரிந்தால், அவர்களைத் தண்டிக்கிற உரிமையும் உங்களுக்கு உண்டு. அது அவர்களை இலேசாக காயம்படாதபடி அடிப்பதாகும். அவர்களுக்கு ஒழுங்கான முறையில் உணவும் உடையும் வழங்குங்கள்; அவர்களுக்கு நன்மையை நாடுங்கள்; அவர்கள் உங்களின் உதவியாளர்களாகவும் உங்களைச் சார்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். அல்லாஹ்வின் பெயரை முன்மொழிந்தே நீங்கள் அவர்களுடன் மணவாழ்க்கை மேற்கொண்டுள்ளீர்கள்!.

(ஸஹீஹ் முஸ்லிம் 2334, ஸஹீஹ் ஜாமிஇ 7880)

இரண்டைப் பின்பற்றுவீர்!

மக்களே! சிந்தித்துப் புரிந்து கொள்ளுங்கள்; எனது பேச்சை கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள். நான் எனது பிரசாரத்தை உங்களுக்கு எடுத்துரைத்து விட்டேன். உங்களிடையே அல்லாஹ்வின் வேதத்தையும் அவனது தூதரின் வழிமுறையும்) விட்டுச் செல்கிறேன். நீங்கள் அவற்றைப் பின்பற்றினால், ஒருபோதும் வழிகெட மாட்டீர்கள்!

(ஸஹீஹ் முஸ்லிம் 2334, இப்னு மாஜா 3074) (முஅத்தா இமாம் மாலிக்/மிஷ்காத்182. ஸஹீஹுத் தர்கீப் 40.)

எச்சரிக்கையாக இருப்பீர்!

மக்களே! உங்களது இந்த நகரத்தில், தான் வணங்கப்படுவதைப் பற்றி ஷைத்தான் நம்பிக்கை இழந்து விட்டான்.

ஆனாலும், அவன் மகிழ்ச்சியுறும் விதமாய் நீங்கள் அற்பமாக கருதும் சில விஷயங்களில் அவனுக்கு நீங்கள் கீழ்ப்படிவீர்கள். ஆகவே, உங்களது மார்க்க விஷயத்தில் அவனிடம் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்!

(பிக்ஹு சூரா456. ஸஹீஹ் ஜாமிஇ 7880/முஸ்தத்ரகுல் ஹாகிம். ஸஹீஹுத் தர்கீப் 40)

இன்னும், (மகா பொய்யன்) தஜ்ஜாலைப் பற்றியும் உங்களுக்கு எச்சரிக்கிறேன்.

அல்லாஹ் அனுப்பிய எந்த இறைத்தூதரும் (அவனைப் பற்றித்) தம் சமுதாயத்தாரை எச்சரிக்காமல் இருந்ததில்லை. (இறைத் தூதர்) நூஹ் அவர்கள் (தம் சமுதாயத்தாருக்கு) அவனைப் பற்றி எச்சரித்தார்கள். அவர்களுக்குப் பின்னால் வருகை தந்த இறைத்தூதர்களும் எச்சரித்தார்கள். மேலும், (என் சமுதாயத்தினரான) உங்களிடையேதான் (இறுதிக் காலத்தில்) அவன் தோன்றுவான். அவனது (அடையாளத்) தன்மைகளில் எதேனும் சில உங்களுக்குப் புலப்படாமல் போனாலும், நிச்சயமாக உங்களுடைய இறைவன் உங்களுக்குத் தெரியாதவனல்லன் என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும்! உங்கள் இறைவன் ஒற்றைக் கண்ணன் அல்லன். அவனோ, (தஜ்ஜாலோ) வலது கண் குருடானவன். அவனது கண் (ஒரே குலையில்) துருத்திக் கொண்டிருக்கும் திராட்சை போன்று இருக்கும். (ஸஹீஹ்ல் புகாரி 4402)

இறை ஏற்பாட்டை மாற்றாதீர்!

(மாதத்தின் நாட்களை தன் இஷ்டப்படி) முன் பின்னாக்குவதெல்லாம் இறை நிராகரிப்பை அதிகரிக்கும் செயலாகும். ஆதனால் நிராகரிப்பவர்கள்தான் வழிகெடுக்கப்படுகிறார்கள். எனென்றால், அவர்கள் தங்கள் இஷ்டப்படி மாதங்களை முன் பின்னாக்கி ஓர் ஆண்டில் அம்மாதங்களில் போர் புரிவதை

ஆகுமாக்கிக் கொள்கிறார்கள். மற்றோர் ஆண்டில் அதே மாதங்களில் போர் புரிவது கூடாது என்று தடுத்து விடுகிறார்கள். இவ்வாறு அவர்கள் செயவதன் நோக்கமெல்லாம் தாங்கள் தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கையை அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கைக்குச் சரியாக்கி, அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களையும் தாங்கள் ஆகுமாக்கிக் கொள்வதற்குத்தான். (அல்குர்அன்9:37) (தாரீக் இப்னு கல்தூன் 59/2)

அறிந்து கொள்ளுங்கள்:

நிச்சயமாக காலம், வானங்களையும் பூமியையும் அல்லாஹ் படைத்த அன்றிருந்த அதன் அமைப்பைப் போன்றே, இப்போதும் சுற்றிவருகின்றது. அல்லாஹ்விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகும். இப்படித்தான் வானங்களையும் பூமியையும் அல்லாஹ் படைத்த அன்று, அவனது புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் சங்கைக்குரியன. மூன்று, தொடர்ந்து வருபவை. அவை துல்கஅதா, துல்ஹஜ், முஹர்ரம், நான்காவது ஜுமாதல் உலாவிற்கும் ஷஅபானிற்கும் இடையில் உள்ள ரஜப் ஆகும்.

(ஸஹீஹுல் புகாரி 4662, ஸுனன் அபூதாவூத் 1942)

சகோதரம் பேணுவீர்!

ஒவ்வொரு முஸ்லிமும் மற்ற முஸ்லிமுக்குச் சகோதரர் ஆவார். முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்களே! ஒரு முஸ்லிமின் பொருள் பிறருக்கு அறவே ஆகுமானதல்ல; மனமுவந்து கொடுத்தாலே தவிர! உங்களுக்கு நீங்கள் அநீதம் இழைத்துக் கொள்ளாதீர்கள்.

(ஸஹீஹுல் ஜாமிஇ 7880, தாரீக் இப்னு கல்தூன் 59/2, ஃபிக்ஹுஸ் ஸீரா 456)

சொர்க்கம் செல்ல இதுதான் வழி!

ஒ...மக்களே! உங்கள் இறைவனையே வணங்குங்கள்;

உங்கள் இறைவனுக்கே பயந்து கொள்ளுங்கள்; கடமையான ஐவேளைத் தொழுகைகளையும் தவறாது பேணுங்கள்; (ரமழானில்) நோன்பு நோற்று வாருங்கள்; விருப்பமுடன் ஸகாத் கொடுத்து விடுங்கள்; அல்லாஹ்வின் இல்லத்தை ஹஜ் செய்யுங்கள்; உங்களில் அதிகாரம் உடையோருக்குக் கட்டுப்பட்டு நடங்கள்; நீங்கள் சொர்க்கம் செல்வீர்கள்!.

(ஜாமிவுத் திர்மிதி616, ஸஹீஹுத் திர்மிதி516, மிஷ்காத் 576, முஸ்னத் அஹ்மத், தாரீக் இப்னு ஜரீர், தாரீக் இப்னு அஸப்கிர், மஆதினுல் அஃமால் 1108,1109)

குற்றவாளியே தண்டிக்கபடுவார்!

ஒருவர் குற்றம் செய்தால் அதற்கான தண்டனை அவருக்கே கொடுப்படும்; மகனுடைய குற்றத்திற்காக தந்தையோ, தந்தையின் குற்றத்திற்காக மகனோ தண்டிக்கப்பட மாட்டார்.

(ஸஹீஹுல் ஜாமிஇ 7880, ஜாமிவுத் திர்மிதி2159,3078, ஸஹீஹுத் திர்மிதி373,461, ஸுனன் இப்னு மாஜா 3055, ஸஹீஹ் இப்னு மாஜா 1015.)

இஸ்லாம் முழுமையாகி விட்டது

ஒவ்வோரு இறைத்தூதரின் பிரார்தனையும் (இவ்வுலகிலேயே) முடிந்து விட்டன; என் பிரார்த்தனையைத் தவிர! நான் அதை மறுமை நாளுக்காக என் இறைவனிடம் சேமித்து வைத்திருக்கிறேன். அறிந்து கொள்ளுங்கள்; மறுமை நாளில் இறைத்தூதர்கள் தங்களது சமுதாயத்தினர் அதிகமாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுறுவார்கள். அப்போது என்னை நீங்கள் கேவலப்படுத்தி விடாதீர்கள். நான் உங்களுக்காக கவ்ஸர் நீர் தடாகத்திற்கு அருகில் உட்கார்ந்திருப்பேன். (மஜ்மவுஸ் ஸவாயிது 271/3)

மக்களே! எனக்குப்பின் எந்த ஓர் இறைத்தூதரும் இல்லை; உங்களுக்குப்பின் எந்த ஒரு சமுதாயமும் இல்லை.

(ஸிலாலுஸ் ஜன்னா 1061)

இங்கு வந்திருப்பவர்கள், வராதவர்களுக்கு இந்த வழிகாட்டல்களை எடுத்துச் சொல்லட்டும்; விஷயம் சென்று சேருபவர்களில் சிலர், நேரடியாக கேட்பவரைவிட நன்கு ஆராயும் தன்மை உடையவராக இருக்கலாம்.

(ஸஹீஹுல் புகாரி 67,105,1741)

பிறகு நபி (ஸல்) அவர்கள் மக்களை நோக்கி, மறுமை நாளில் உங்களிடம் என்னைப் பற்றி விசாரிக்கப்படும்போது நீங்கள் என்ன சொல்வீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள் , **"நீங்கள் (மார்க்க போதனைகள் அனைத்தையும் எங்களிடம்) தெரிவித்து விட்டீர்கள்; (உங்களது தூதுத்துவப் பொறுப்பை) நீங்கள் நிறைவேற்றி விட்டீர்கள்; (சமுதாயத்திற்கு) நன்மையை நாடினீர்கள் என நாங்கள் சாட்சியம் அளிப்போம்"** என்றார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் அவர்கள், தமது ஆட்காட்டி விரலை வானை நோக்கி உயர்த்தி சைகை செய்துவிட்டுப் பிறகு, அதை மக்களை நோக்கித் தாழ்த்தி **"இறைவா! இதற்கு நீயே சாட்சி! இறைவா! இதற்கு நீயே சாட்சி! இறைவா! இதற்கு நீயே சாட்சி!"** என்று முடித்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் 2334).

இவ்வாறு அவர்கள் கூறிய அதே இடத்தில் அல்லாஹ்வின் புறத்திலிருந்து கீழ் வருமாறு இறைவசனம் இறங்கியது:

"இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை முழுமையாக்கி விட்டேன்; மேலும், நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும், உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே

தேர்ந்தெடுத்துக் கொண்டேன். (அங்கீகரித்துக் கொண்டேன்.)" (அல்குர்அன் 5:3)

(ஸஹீஹில் புகாரி 4406, 4407, முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா, தாரீக் இப்னு ஜரீர், தாரீக் இப்னு கஸீர், அத்துர்ருல் மன்ஸுர்)



16. தூதுத்துவ பணி முடிவுற்றதால், இறுதி தூதர் முஹம்மது நபியின் இறுதி நாட்களும், மரணமும்!

அழைப்புப் பணி நிறைவுற்று இஸ்லாம் நிலைமைகளை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்போது இவ்வுலக வாழ்க்கையில் இருந்தும் அதில் வாழ்பவர்களிடமிருந்தும் விடைபெறும் அறிகுறிகள் நபி ஸல் அவர்களின் உணர்வுகளில் தோன்றின அவர்களின் சொல் செயல்களிலும் வெளிப்பட்டது.

ஹிஜ்ரி 11 ஸஃபர் மாதம் திங்கட்கிழமை பிறை 28 அல்லது 29 மரணித்த ஒருவரை நல்லடக்கம் செய்துவிட்டு திரும்பும் வழியில் நபி (ஸல்) அவர்களுக்கு கடும் தலைவலி ஏற்பட்டது உடல் சூடு அதிகமானது. தலை மேல் கட்டிருந்த துணிக்கு மேல்புறத்திலும் அனலை உடன் இருப்போர் உணர்ந்தனர். 11நாட்கள் நோய்வாய்ப்பட்ட நிலையிலையே மக்களுக்கு தொழுகை நடத்தினார்கள் 13 அல்லது 14 நாட்கள் கடினமான நோய்களில் கழித்தார்கள்.

மக்களே நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற மனிதன் தான். உங்களை விட்டுப் பிரியும் நேரம் நெருங்கிவிடலாம். ஆகவே உங்களில் எவருடைய மானத்திற்காவது, எவர் முடிக்காவது, எவருடைய உடம்புக்காவது, எவருடைய செல்வத்திற்காவது, நான் கேடு விளைவித்திருந்தால் இதோ இந்த முஹம்மதிடம் கணக்கு தீர்த்துக் கொள்ளுங்கள். இதோ முஹம்மதின் மானம், முஹம்மதின் முடி, முஹம்மதின் உடல் முஹம்மதின் செல்வம் பாதிக்கப்பட்டவர் எழுந்து கணக்கத் தீர்த்துக் கொள்ளுங்கள். அப்படி செய்தால் முஹம்மதின் வெறுப்புக்கும் பகைமைக்கும் ஆளாக நேரிடுமோ என்று நான் பயப்படுகிறேன் என உங்களில் யாரும் சொல்ல வேண்டாம்! கவனியுங்கள்! நிச்சயமாக பகைமையும் வெறுப்பும் எனது சுபாவத்திலேயே இல்லாதவை. எனது பண்பும் அவையல்ல. மரணப்படுக்கைக்கு சில நாட்கள் முன் மக்களை திரட்டிச் செய்த அறிவிப்பு இது இதற்காக பள்ளிவாசலுக்கு வரவும் அவர்களால்

முடியவில்லை.

ஒரு நாள் கூட்டை தணித்துக்கொள்ள தண்ணீரை மேலே ஊற்றிய வண்ணம் போர்வையை போர்த்தியவர்களாக ஒரு சபைக்கு வந்தார்கள். "மக்களே என்னிடம் வாருங்கள்" என்று கூறிய போது மக்கள் நபி (ஸல்) அவர்களை நோக்கி விரைந்து வந்தனர். அப்போது நபி (ஸல்) அவர்கள் கூறியவற்றில் இதுவும் ஒன்று. யூத ,கிறிஸ்தவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் ஏற்படட்டும்! தங்களின் தூதர்களுடைய அடக்கத் தலங்களை வணக்கத் தலங்களாக மாற்றி விட்டனர். மற்றொரு அறிவிப்பில் யூதர்களும் கிறிஸ்தவர்களையும் அல்லாஹ் அழிப்பானாக! தங்கள் தூதர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடங்களை வணங்கும் இடமாக மாற்றி விட்டனர். எனது மண்ணறையை (அடக்கம் செய்யப்பட்ட இடத்தை) வணங்கும் இடமாக ஆக்காதீர்கள்! என்று கூறினார்கள்.

தன்னிடம் பழிதீர்த்துக் கொள்ள மக்களிடம் தன்னை ஒப்படைத்தார்கள். யாரையாவது நான் முதுகில் அடித்திருந்தால் இதோ எனது முதுகை தந்துவிட்டேன். பழி தீர்க்கட்டும். யாரையாவது கண்ணியம் குறைய திட்டி இருந்தால் இதோ நான் முன்வந்துள்ளேன். அவர் பழி தீர்த்துக் கொள்ளட்டும். பின்பு அந்த மேடையில் இருந்து இறங்கி உச்சித் தொழுகையை தொழ வைத்தார்கள். மீண்டும் மேடை ஏறி முன்னர் உரை நிகழ்த்தியவாறு பழி தீர்த்துக் கொள்ள வேண்டுவோர் பழித்தீர்க்க கூறினார்கள். அப்பொழுது ஒருவர் எழுந்து எனக்கு மூன்று திரகம் தர வேண்டும் என்று கூறவே, ஃபழ்லே நீங்கள் அதைக் கொடுத்து விடுங்கள். என்று அவர்கள் கூறினார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், தனது நட்பாலும் பொருளாலும் எனக்கு மக்களில் அதிகமதிகம் உபகாரம் செய்தவர் அபூபக்கர் (ரலி) அவர்களே ஆவார் என்றார்கள் கடைசி நேரத்தில் தங்களது கையை அல்லது விரலை உயர்த்தினார்கள். அவர்களது பார்வை முகட்டை நோக்கியது. அவர்களது உதடுகள் அசைந்தன.

அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று மனைவி ஆயிஷா (ரலி) அவர்கள் செவி தாழ்த்தி கேட்டார்கள் அப்போது நபி ஸல் அவர்கள் இறைத்தூதர்கள், வாய்மையாளர்கள், இறைப்போர் தியாகிகள், நல்லோர்கள், ஆகிய நீ அருள் செய்தவர்களுடன் அல்லாஹ்வே என்னை மன்னிப்பாயாக! என் மீது கருணை காட்டுவாயாக! உயர்ந்த நண்பருடன் என்னை சேர்த்து வைப்பாயாக அல்லாவே உயர்ந்த நண்பனை.. கடைசி வார்த்தையை மட்டும் மூன்று முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் உயர்த்திய அவர்களுடைய கை சாய்ந்தது உயர்ந்தவனிடம் சென்றார்கள்.

இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன் (நாம் அல்லாஹ்விடமிருந்தே வந்தோம் மீண்டும் அவனிடமே திரும்பிச் செல்கிறோம் தூதுத்துவத்தை நிறைவேற்றிய இறுதி இறைத்தூதர் அவர்கள் இவ்வுலகை விட்டு பிரிந்து சென்றார்கள்.

இறுதியாக உங்களிடம்...

அன்புள்ள சகோதர, சகோதரிகளே!

நபிகள் நாயகத்தைப் பற்றிய தொகுப்பை படித்த நீங்கள் இதன் மூலம் அறிய மற்றும் உணர்ந்து கொள்ள வேண்டிய முக்கியமான செய்தி என்னவென்றால் **நபி (ஸல்) அவர்கள் உங்களுக்குமான இறைத்தூதர் தான் என்பதே!**

1. **படைத்த அந்த ஒரே இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என்பதும்,**
2. **முஹம்மது நபியை இறுதி தூதராக ஏற்று அவருக்கு 23 ஆண்டு காலமாக இறைவன் வழங்கிய (குர்ஆன் என்ற) வேதத்தையும், அவருடைய வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் என்பதும்,**
3. **மேற்கண்ட இரண்டு கொள்கையைப் பின்பற்றி நடக்கும் பொழுது நாம் இறந்த பிறகு முழுமையாக விசாரிக்கப்பட்டு அதற்க்கான கூலியாக சுவர்க்கமும், இந்த கொள்கைகளை மறுத்தோ, முற்றிலுமாக நிராகரித்தோ அல்லது தான்தோன்றித தனமாக நடப்பேன் என்று தன்னிச்சையாகச் செயல்படுபவர்களுக்கு அல்லது எங்கள் மூதாதையர்களை எதில் இருக்க காண்கிறோமோ அதையே பின்பற்றுவோம் எனகிறவர்களுக்கு நரகமும் வல்ல அல்லாஹ் சித்தப்படுத்தி வைத்திருக்கிறான் என்பதும் தான்.**

அந்த மூன்று கட்டளைகள்.

இதைப்பற்றி சிந்தித்து, உணர்ந்து, மனமார ஏற்றுக் கொண்டு வாழுபவர்கள்தான் உங்களோடு ஏதாவது ஒரு வகையில் அன்றாடம்

உறவாடும் அல்லது நீங்கள் காண்கிற முஸ்லிம்கள் (இந்தியாவிலும், உலகம் முழுவதிலும்.)

இதைப் படிக்கும் **உங்களையும் மனதார இந்த உண்மையை உணர்ந்து, ஆராய்ந்து ஓரிறைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறோம்!**

இறைவா! எங்களுக்கு நேர்வழி காட்டு!

உண்மையை உணர வழி செய்!

உண்மையை ஏற்று உன்னை பின்பற்றும் வழியை இலேசாக்கி வை!

இறைவா எங்களுக்கு நேர்வழி காட்டு!

இறைவா எங்களுக்கு நேர்வழி காட்டு!

இறைவா எங்களுக்கு நேர்வழி காட்டு!

என்று பிரார்த்தித்த வண்ணமாகவே இருங்கள்! இறைவன் புறத்திலிருந்து வரும் நேர்வழி உங்களை அரவணைத்துக் கொள்ளும்.

"இன்ஷா அல்லாஹ்!"

முஸ்லிமாக ஆவதும் முஸ்லிமாக இருப்பதும் எப்படி?

நாம் அறிய வேண்டியது என்ன?

கீழ்க்கண்ட உறுதிமொழியை கூறுவதன் மூலமாகவும் ஒருவர் முஸ்லிமாக ஆக முடியும்.

"அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு"

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் நான் சாட்சி பகர்கின்றேன்'

உங்களது வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றிட, உண்மைக்குப் பணிந்து உங்களைப் படைத்தவனை ஏற்றுக் கொள்வதற்கு இது தகுந்த நேரமல்லவா?

ஷஹாதா (நம்பிக்கை - உறுதிமொழி)

இஸ்லாமின் முதல் தூண், நம்பிக்கை கொள்வதாகும். அந்த நம்பிக்கையை 'கலிமா' என்று கூறப்படும் 'ஷஹாதா' மூலம் வெளிப்படுத்துவதாகும். அஷ்ஹது அ(ன்)ல்லா இலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு

பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று சாட்சி பகர்கின்றேன். முஹம்மது (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் அடியார் என்றும், அவனது தூதர் என்றும் நான் சாட்சி பகர்கிறேன்.

உறுதிமொழி : அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹ்

உறுதிமொழியின் முதல் பாகத்தில் இறைவன் மனித சமுதாயத்திற்கு அருளியுள்ள மிக முக்கியமான உண்மை அடங்கியுள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ்வைத் தவிர வணங்குவதற்குரிய இறைவன் வேறு யாருமில்லை என்பதே அது.

இறைவன் குர்ஆனில் குறிப்பிடுகின்றான்;

உங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம். "நிச்சயமாக என்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லவே இல்லை என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹ்யி அறிவிக்காமலில்லை. (அல் குர்ஆன் 21:25)

இந்தக் கலிமாவைச் சொல்வதன் மூலம், அனைத்துப் படைப்புகளையும் படைத்தவன் அல்லாஹ் ஒருவனே என்றும், அவன்தான் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொருவர் மீதும், ஒவ்வொரு பொருளின் மீதும் மிக உயர்ந்த அதிகாரம் படைத்தவன் என்பதை ஒரு முஸ்லிம் ஏற்றுக் கொள்கிறான்.

இதன்மூலம், அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும், எந்தப் பொருளும் வணக்கத்திற்குரியன அல்ல என்றும், அவனையே சார்ந்து, அவன்பால் நம்பிக்கை கொண்டு தன்னுடைய விசுவாசத்தையும், ஈடுபாட்டையும், கீழ்ப்படிதலையும் அவனுக்கே உரித்தாக்குகின்ற வகையில் ஒரு முஸ்லிம் தனது இதயத்தையும், உள்ளத்தையும் இறைவனுக்கு நெருக்கமாக்கிக் கொள்கிறான்.

இறைவனைத் தவிர பிறவற்றை (மலக்குகள், முஹம்மது நபி (ஸல்) உள்ளிட்ட இறைத்தூதர்கள், சமயத்துறவிகள், சிலைகள், சூரியன், சந்திரன், மரம் ஆகியன) வணங்குமாறு கட்டளையிடுவது இஸ்லாமின் அடிப்படைக் கொள்கைக்கு முரணானதாகும். ஒருவன் தனது இறப்பிற்கு முன்னர் அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டாலே தவிர இது மன்னிக்க முடியாத பாவமாகும். அனைத்து வகையான வணக்க வழிபாடுகளும் ஒரே இறைவனாகிய அல்லாஹ்வை நோக்கியே இருக்கவேண்டும்.

இறை நிராகரிப்பு என்பது, மனிதர்களின் கரங்களிலும் கற்பனையிலும் உருவான மரம் மற்றும் கல்லால் ஆன ஆண் கடவுள்கள், பெண் தெய்வங்களை நம்புவது மட்டுமல்ல

மாறாக, இஸ்லாமைத் தவிர அனைத்து வகையான பிற கொள்கைகள், மூடப்பழக்கங்களை நம்புவதும், சிறப்பு அதிகாரம் படைத்தவர்களாகவும் புனிதமானவர்களாகவும் மதத் தலைவர்களை மதித்து அவர்களை நேசிப்பதும் அவர்களுக்குக் கீழ்ப்படிவதும் இணைவைத்தலாகும்.

மேலும் இந்த இறை நிராகரிப்பாகிறது, ஜோதிடம், கைரேகை பார்த்தல், அதிர்ஷ்ட மந்திரம், குறி சொல்லுதல், மறைவான விஷயங்களைத் தெரிந்து கொள்ள முற்படுதல், சமயஞானிகளின் கல்லறைகளுக்கும், நினைவிடங்களுக்கும் சென்று தமக்காக இறைவனிடம் பரிந்துரைக்குமாறு அவர்களிடம் வேண்டுதல் போன்ற செயல்களையும் உள்ளடக்கியதாகும். அல்லாஹ்விடமே நேரடியாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

தொழுகை, நோன்பு, வேண்டுதல், அடைக்கலம் நாடுதல், விலங்குகளைப் பலியிடுதல் போன்ற அனைத்து வகையான வணக்க வழிபாடுகளும் இறைவனுக்காகவே செய்யப்பட வேண்டும்.

இறைவனை மகிழ்விக்கும் செயல்களில் ஈடுபடுவது, பேசுவது, அவன் கட்டளையிட்ட, ஊக்குவித்த விஷயங்களை தனித்து நேரடியாகவோ அல்லது கூட்டாகவோ செய்வது ஆகியவையும் வணக்க வழிபாடுதான். ஆகையால், வணக்கம் என்பது இஸ்லாமின் ஐந்து கடமைகளை நிறைவேற்றுவதோடு மட்டும் குறுகிப்போய் விடவில்லை. அது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களையும் உள்ளடக்கியது.

ஒருவன் தனது குடும்பத்திற்கு உணவளிப்பது, இன்னொருவனின் மகிழ்ச்சிக்காகச் சில வார்த்தைகளைக் கூறுவது போன்ற செயல்களும் இறைவனை மகிழ்விக்கும் நோக்கில் செய்யப்பட்டால் அதுவும் ஒரு வணக்க வழிபாடேயாகும். வணக்க வழிபாடுகள் அனைத்தும் இறைவனுக்காக மட்டுமே சரியான முறையில் செய்யப்பட வேண்டும் என்பதே இதன் பொருள்.

உறுதிமொழி : அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு

உறுதிமொழியின் இரண்டாவது பகுதியின் பொருள் முஹம்மது (ஸல்) அவர்கள், இறைவனின் தூதராகவும், அவனது அடியாராகவும் இருக்கின்றார்கள் என்பதாகும். இது ஒருவர் நபிகளாரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவற்றைப் பின்பற்ற வேண்டியதை உணர்த்துகின்றது. நபி (ஸல்) கூறியவற்றையும், போதனைகளையும், அவர்கள் தம் நடைமுறைகளையும் நம்ப வேண்டும். எதனைச் செய்யக்கூடாது என்று தடுத்துள்ளார்களோ, அவற்றைத் தவிர்த்திட வேண்டும். அவர்கள் போதித்தபடி இறைவனை மட்டுமே வணங்க வேண்டும். இறைவனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட வேத வெளிப்பாடுகளே அவர்களின் போதனைகளாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மனித குலமே பின்பற்றத்தக்க அளவிற்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள். எனவே அவர்களது வாழ்க்கையையும், நடைமுறைகளையும் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். இறைவன் கூறுகிறான்;

"நிச்சயமாக நீர் மகத்தான நற்குணமுடையவராகவே இருக்கிறீர்."
(அல் குர்ஆன் 68:4)

மேலும் இறைவன் கூறுகின்றான்;

"எவர்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உறுதியாக நம்புகிறார்களோ அவர்கள் பின்பற்றி நடக்கவேண்டிய அழகான உதாரணம் நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடமே இருக்கிறது." **(அல் குர்ஆன் 33:21)**

தம்முடைய சொற்களிலும், செயல்களிலும், நடவடிக்கை களிலும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் குர்ஆனின்

போதனைகளின்படி வாழ்ந்திடவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். நபிகளாரின் மனைவி அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் நபிகளாரின் பண்புகள் பற்றி கேட்டபோது, அதற்கு அவர் 'குர்ஆனே அவர்களது பண்பாக இருந்தது' என்று கூறினார்.

கலிமாவின் இரண்டாவது பாகம், நாம் நம் வாழ்க்கையின் அனைத்து விஷயங்களிலும் நபிகளாரைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதேயாகும். இறைவன் கூறுகின்றான்:

"(நபியே! மனிதர்களை நோக்கி) கூறுவீராக! நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான்." (அல் குர்ஆன் 3:31)

"....ஆகவே, நம் தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனமுவந்து) எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதைவிட்டும் உங்களைத் தடுத்தாரோ, அதைவிட்டு நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்." (அல் குர்ஆன் 59:7)

முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் இறுதித்தூதர் அவர்களுக்குப் பிறகு இறைத்தூதர்கள் யாரும் வரமாட்டார்கள் என்பதும் இதன் பொருளாகும்.

"(நம்பிக்கையாளர்களே!) உங்களில் உள்ள ஆண்களில் ஒருவருக்கும் முஹம்மது (நபி அவர்கள்) தந்தையாக இருக்கவில்லை. எனினும் அவர் அல்லாஹ்வுடைய தூதராகவும் நபிமார்களுக்கு (இறுதி) முத்திரையாகவும் (இறுதி நபியாகவும்) இருக்கிறார். (ஆகவே, அவருக்குப் பின்னர் ஒரு தூதரையும் அனுப்ப மாட்டான்) அல்லாஹ் அனைத்தையும்

நன்கறிந்தவனாக இருக்கிறான்."

(அல் குர்ஆன் 33:40)

முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் மீது நம்பிக்கை கொள்வதென்பது அவர்கள் கொண்டு வந்த வழி காட்டலிலும், சுன்னாவிலும் (அவர்களது செயல்பாடுகள் அமுதமொழிகள்) நம்பிக்கை கொள்வதையும் உள்ளடக்கியதாகும். அவர்களது வழிகாட்டுதல்களை விசுவாசமாகப் பின்பற்ற வேண்டும் என்பதையும் அது வலியுறுத்துகிறது. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதரே.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தூய்மையான நேரிய பண்பும், அசாரணமான நேர்மையும், அல்லாஹ்வின்பால் அசைக்க முடியாத நம்பிக்கையும் இஸ்லாமின்பால் உறுதிப்பாடும் கொண்டிருந்த போதிலும், அவர்கள் இறைத்தன்மை கொண்டவர்கள் அல்ல. எனவே, முஸ்லிம்கள் நபிகளாரை வணங்கமாட்டார்கள்.

நான் எப்படி முஸ்லிமாக ஆவது?

'இறைவனின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிபவன்' என்பதே முஸ்லிம் என்ற வார்த்தையின் பொருளாகும். (இனம், தேசியம், குலப் பின்னனி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு) முஸ்லிமாக ஆவது மிக எளிதானது. அது எந்தவிதமான முன் நிபந்தனையுமற்ற ஒரு எளிய வழிமுறையாகும். ஒருவர் தனித்தோ அல்லது பிறருடைய முன்னிலையிலோ தன்னை இஸ்லாமில் இணைத்துக் கொள்ளலாம். ஒருவர் முஸ்லிமாக வேண்டுமென்று விரும்பினால், இஸ்லாம் ஓர் உண்மையான மார்க்கம் என்ற பற்றுறுதியும் அதன்பால் ஆழமான நம்பிக்கையும் அவருக்கு இருந்தால், எந்தத் தாமதமுமின்றி, நம்பிக்கையின் உறுதிமொழியான கலிமாவைச் சொல்லி அவர் இஸ்லாமில் இணையலாம். இஸ்லாமின் ஐந்து தூண்களில் கலிமா முதலாவதும் முக்கியமானதுமாகும். உண்மையான நம்பிக்கையுடனும், பற்றுறுதியுடனும் கலிமா சொல்வதன் மூலம்

ஒருவர் இஸ்லாமிற்கு வந்து விடுகிறார்.

கலிமாவை (நம்பிக்கை உறுதிமொழியை) அரபியில் சொல்லிட முயற்சி செய்யுங்கள். **"அஷ்ஹது அ(ன்)ல்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீகலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு"**

இந்த நிகழ்ச்சிக்கு சாட்சி யாரும் தேவையில்லை. இதற்காகப் பெரிய விழா நடத்த வேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் இது உங்களது தனிப்பட்ட உறுதிமொழியே ஆகும். எனினும், முடிந்தால் முஸ்லிம்கள் சாட்சிகளாக இருக்க நீங்கள் கலிமாச் சொல்லி இஸ்லாமில் இணைவது விரும்பத்தக்கதாகும். ஆனால், இதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இஸ்லாமில் இணைந்திடத் தாமதம் செய்யாதீர்கள். நீங்கள் முஸ்லிம் ஆன பிறகு குளித்து விட்டு இரண்டு ரகஅத் தொழ வேண்டும்.

இஸ்லாமில் சேரும் எண்ணத்துடன் உடல் முழுவதையும் நன்றாகச் சுத்தம் செய்து குளிப்பதற்கு 'குஸ்ல்' என்று பெயர். கடந்த காலத்தில் செய்த தவறுகளையும், பாவங்களையும் துடைத்தெறிந்து, அதுவரை நிகழ்ந்த செயல்களுக்காக அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருவதற்கான ஒரு அடையாளப் பூர்வமான நடவடிக்கையே இது எனலாம்.

கடந்தகாலப் பாவங்கள் மன்னிக்கப்படுதல்?

"....அல்லாஹ்வைத் தவிர (இவர்களின்) குற்றங்களை மன்னிப்பவன் யார்?"
(அல் குர்ஆன் 3:135)

முற்றிலும் இறைவனின் விருப்பத்திற்காகவே நீங்கள் இஸ்லாமில் இணைகிறீர்கள். உங்களது கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்பட்டு நீங்கள் இறைப்பற்றும், நேர்மையும் கொண்ட ஒரு புதிய வாழ்க்கையைத் துவக்குகின்றீர்கள். இஸ்லாமில் இணைவதற்கு

விரும்பிய ஒருவரிடம் நபிகள் நாயகம் (ஸல்), **'உம்முடைய கடந்த காலப் பாவங்கள் மன்னிக்கப்படும்'** என்று கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (ஒரு தோழரிடம்) "இஸ்லாமில் நீர் இணைவது, முன்னர் நீர் செய்த பாவங்கள் அனைத்தையும் அழித்துவிடும் என்பது உமக்குத் தெரியாதா?" (முஸ்லிம்)

> "ஒருவன் மனப்பூர்வமாக இஸ்லாமை ஏற்றுக் கொண்டால், அல்லாஹ் அவனது முந்திய அனைத்துப் பாவங்களையும் மன்னித்து விடுகிறான். அதற்குப் பின், கணக்கு பைசல் செய்யும் பணி துவங்கும். ஒவ்வொரு நற்செயலுக்கும் 10 முதல் 700 மடங்கு வரை வெகுமதிகள் அளிக்கப்படும். அல்லாஹ் பாவமன்னிப்பு வழங்காவிட்டால் மட்டுமே தீய செயல்கள் பதிவு செய்யப்படும்" என நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். (புகாரி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> "சமயம் எளிதானது. யாரொருவர் சமயத்தை பளுவாக்கிக் கொண்டாரோ அவருக்கு அதே வழியில் தொடர்ந்து செல்வது சிரமமாகி விடும். எனவே அதில் நீங்கள் அதி தீவிரம் காட்ட வேண்டாம். ஆனால், முழுமையின் பக்கம் நெருங்கி வர முயற்சிகள் மேற்கொண்டு நற்செய்திகளைப் பெற்றிடுங்கள். காலை நேரங்களிலும், பிற்பகலிலும், இரவின் இறுதி நேரங்களிலும் தொழுகை புரிந்து நன்மையடையுங்கள்!" (புகாரி)

ஒருவர் இஸ்லாமை ஏற்றுக் கொள்கிறார் என்றால் அவர் தனது பழைய வாழ்க்கைக்காகவும், நம்பிக்கைகளுக்காகவும் வருத்தமடைகிறார் என்றே பொருள். இஸ்லாமில் இணைவதற்கு

முன்னால் புரிந்திட்ட பாவங்களுக்காக ஒருவர் அதிகம் கவலையுறத் தேவையில்லை. தாயின் வயிற்றிலிருந்து அப்போதுதான் பிறந்த பச்சிளம் குழந்தையைப் போல், இஸ்லாமில் சேரும்போது அவரது பதிவேடு சுத்தமாக இருக்கின்றது.

இஸ்லாமின் போதனைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம்

முஸ்லிமாக இருப்பதென்றால் என்னபொருள் என்பதை நீங்கள் தெரிந்துகொண்டு, உண்மையான இஸ்லாமிய நெறிமுறைகளின்படி வாழத் துவங்க வேண்டும். குர்ஆனும், ஹதீஸும் (நபிகளாரின் அமுதமொழிகள்) இஸ்லாமைப் பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. இறைவன் கூறுகின்றான்.

"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான்."
(அல் குர்ஆன் 3:19)

"இஸ்லாமை அன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவே மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார்."
(அல் குர்ஆன் 3:85)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவன் இணை, துணையற்றவன். முஹம்மது (ஸல்) அவர்கள், அவனின் தூதர் மற்றும் அடியார். ஈஸா நபி (அலை) அவர்கள், இறைவனின் தூதர். இறைவனின் வார்த்தைகள்

அன்னை மர்யமின் மீது பொழியப்பட்டு அதன்மூலம் படைக்கப்பட்டவர் ('ஆகுக' என்று கூறி இறைவன் அவரைப் படைத்தான்); சொர்க்கம் என்பது உண்மை; அது போலவே நரக நெருப்பும் உண்மை என்று யார் சாட்சியம் பகர்கின்றாரோ அவரை அவரது செயல்களுக்கு ஏற்ப இறைவன் சொர்க்கத்தில் நுழையச் செய்வான்" (புகாரி)

"அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று சாட்சி பகர்ந்து யார் இறைவனை நாடுகின்றாரோ அவரை நரகத்தில் நிரந்தரமாகத் தங்கியிருப்பதை விட்டும் இறைவன் தடுக்கின்றான்" என்று நபி (ஸல்) (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

முஸ்லிமாக இருப்பதற்கான சில முக்கிய அடிப்படையான விஷயங்கள்:

நேரான செயல்களை ஏற்றுக்கொள்வதென்பது (ஷஹாதா/ முஸ்லிமாக ஆகுவதற்கு வாக்குமூலம் அளிப்பது ஆகியன) கீழ்க்கண்ட இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் அமைவதாகும்.

1. செயல்களைச் செய்வதன் நோக்கம், முற்றிலும் அல்லாஹ்வுக்காகவே இருக்க வேண்டும். புகழ் பெறுவதற்காகவோ, புகழப்படுவதற்காகவோ செய்யக்கூடாது.
2. செயல்கள் அனைத்தும் அல்லாஹ்வின் இறுதித் தூதரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னாவின் (வழிமுறை) அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட வேண்டும்.

நீங்கள் அறிந்த விஷயங்களுக்காகப் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளீர்கள். அறியாத விஷயங்களை அறிந்து கொள்வதற்காக நேரம் ஒதுக்கவும் கடமைப்பட்டுள்ளீர்கள்.

நீங்கள் ஒரு முஸ்லிமாக இல்லையென்றால், இஸ்லாமைப்

பற்றி அறிந்து கொள்ள முயற்சிப்பதும், இஸ்லாமிய மார்க்கத்தில் உங்களுக்குப் புரியாத விஷயங்களைப் பற்றி மார்க்கத்தை அறிந்தவர்களிடம் விளக்கம் கேட்டுப் பெறுவதும் உங்கள் மீது கடமையாகும்.

"நீங்கள் அறிந்திருக்கவில்லையென்றால்
அறிந்தவர்களிடம் கேளுங்கள்!"
(அல் குர்ஆன் 16:43)

அல்லாஹ்வே நீதான் நேர்வழி காட்டுபவன். இந்நூலை வாசிப்பவர்களுக்கு உனது நேர்வழியை அவர்களை அந்த நேர்வழியில் செலுத்து! புரியவை!

எல்லாப்புகழும் உனக்கே! நீ நன்கறிந்தவன்! நன்கு செவியுறுபவன்!







Who is Prophet Muhammad?

Say, "I am not something new
among the messengers, nor do I know
what will be done with me or with you.
I only follow that which is revealed to me,
and I am not but a clear warner."

Quran 46:9













இறைத்தூதர் முஹம்மது யார்?

(இறைவனால்) அனுப்பப்பட்ட இறைத்தூதர்களில் நான் புதிதாக வந்தவனல்ல. (எனக்கு முன்னர் இறைத்தூதர்கள் பலர் வந்தே இருக்கின்றனர்.) மேலும், என்னைப் பற்றியோ அல்லது உங்களைப் பற்றியோ என்ன செய்யப்படும் என்று எனக்கு தெரியாது. (இறைவனால்) எனக்கு அறிவிக்கப்பட்டதை மட்டுமே நான் பின்பற்றுகிறேன். நான் (நம் செயல்கள் பற்றி விசாரிக்கப்படும் நியாயத் தீர்ப்பு நாளை) பற்றி தெளிவாக எச்சரிப்பவன் மட்டுமே.' என்று கூறுவீராக!

(குர்ஆன் 46:9)





